ஆய்வு நோக்கில் சமய வழிகாட்டி நூல்கள் - 4

மலைக்கோயில்கள் – முருகன்

வழிபாடும் வரலாறும்

(72 படங்களுடன்)

முனைவர் செ. ராஜேஸ்வரி



சந்திரோதயம் பதிப்பகம்
மதுரை, Ph. 7010997639

ஆய்வு நோக்கில் சமய வழிகாட்டி நூல்கள் - 4

மலைக்கோயில்கள் – முருகன்
வழிபாடும் வரலாறும்

(72 படங்களுடன்)

முனைவர் செ. இராஜேஸ்வரி M.A., M.Phil., Ph.D.,

தமிழக மாநில அரசின் சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதாளர் (2022), சிறந்த பதிப்பக விருதாளர் (2023).
தமிழணங்கு, சக்தி பெண்ணிதழ் ஆய்விதழ்களின் ஆசிரியர்.

சந்திரோதயம் பதிப்பகம்
மதுரை. **Ph. 7010997639**

நூல் விவரம்

நூல் வரிசை : ஆய்வு நோக்கில் சமய வழிகாட்டி நூல்கள் - 4
நூலின் பெயர் : மலைக்கோயில்கள் - முருகன் (வழிபாடும் வரலாறும்)
துறை : சமூகப் பண்பாட்டு ஆய்வு
ஆசிரியர் : முனைவர் செ. இராஜேஸ்வரி
வடிவமைப்பு : செ. மீனாட்சி
பதிப்பாளர் : சந்திரோதயம் பதிப்பகம்
3/422, திருவள்ளுவர் தெரு
தினமணி நகர், மதுரை – 625 018
பதிப்பு : 2025
மொழி : தமிழ்
பக்கங்கள் : 124
விலை : Rs.200/-
பன்னாட்டுத் தரப்புத்தக எண்: 978-81-983729-5-6

- - - - -

Book Series : Studies on Religious History & Worship number - 4
Book : Malai Kovilgal - Murugan Vazhipadum Varalarum
Subject : Socio Cultural Religious Studies
Author : Dr.C.Rajeswari, M.A., M.Phil., Ph.D.,
Designer : C. Meenatchi
Publisher : Chandrothayam Pathippagam
3/422, Thiruvalluvar Street
Dinamani Nagar, Madurai - 625 018
Publish : 2025
Pages : 124
Price : Rs.200/-
ISBN : 978-81-983729-5-6

அன்புக் காணிக்கை

மலைக்கோயில் முருகனுக்கு இந்நூல்

அன்புக் காணிக்கை.

பச்சைமலை பாலமுருகன்

முருகன் துதி

உலகெங்கும் வைகாசி விசாகம், கந்த சஷ்டி, தைப்பூசம், பங்குனி உத்திரம் ஆகிய நாட்களில் முருகனுக்கு விழா எடுக்கப்படுகிறது. அச் சமயங்களில் முருக பக்தர்கள் முருகனைத் துதிக்க போற்றிப் பாடல்களை பாடியும் துதிகள் சொல்லியும் இறைவனை இடையறாது தன் சிந்தையில் இருத்தி இறைஞ்சி வருகின்றனர் அவ்வாறு முருகனைப் போற்றுவதற்கு எளிதாகவும் நினைவில் நிறுத்தக் கூடியதாகவும் பின்வரும் 54 போற்றி துதிகள் வழங்கப் பட்டுள்ளன. இத் துதியைத் தினமும் இரண்டு முறை சொல்லி வர இந்தியாவிலும் வெளிநாட்டிலும் கோயில் கொண்டிருக்கும் முருகன் திருநாமங்களை உச்சரித்த புண்ணியமும் முருகனைத் துதித்து வணங்கிய பலனும் கிடைக்கும்.

ஓம் முருகா போற்றி
ஓம் முத்துக்குமரா போற்றி
ஓம் கந்தா கடம்பா போற்றி
ஓம் கதிர்வேலா சண்முகா போற்றி
ஓம் கார்த்திகேயா போற்றி

ஓம் பரங்குன்றின் வேலவா போற்றி
ஓம் பழனி மலை முருகா போற்றி
ஓம் திருத்தணி குமரா போற்றி
ஓம் செந்தூர் நாதா போற்றி
ஓம் பழமுதிர்ச்சோலை ஐயனே போற்றி

ஓம் சிவ பாலா போற்றி
ஓம் மால் மருகா போற்றி
ஓம் ஔவை கனியே போற்றி
ஓம் வள்ளி மணாளா போற்றி
ஓம் விநாயகர் இளவல் போற்றி

ஓம் தேவசேனாபதி போற்றி
ஓம் சத்ரு சம்ஹாரா போற்றி
ஓம் அக்கினி புத்ரா போற்றி
ஓம் அழகிய குமரா போற்றி
ஓம் ஓங்கார ரூபனே போற்றி

ஓம் ஆறுமுகமே போற்றி
ஓம் பன்னிருகை வேலவா போற்றி
ஓம் பன்னிரு கண்ணுடையாய் போற்றி
ஓம் மயில் வாகனனே போற்றி
ஓம் செந்தமிழ்க் குமரா போற்றி

ஓம் தண்டபாணி தெய்வமே போற்றி
ஓம் குன்றத்தூர் குமரா போற்றி
ஓம் மருதமலை முருகா போற்றி
ஓம் ரத்தினகிரி சரவணா போற்றி
ஓம் சிக்கல் சிங்காரவேலா போற்றி

ஓம் பச்சைமலை கந்தா போற்றி
ஓம் சென்னிமலை முருகா போற்றி
ஓம் ஓதிமலை சண்முகா போற்றி
ஓம் சாமிமலை சாமிநாதா போற்றி
ஓம் எட்டுக்குடி வேலவா போற்றி

ஓம் என்கண் சுப்பிரமணியா போற்றி
ஓம் குறிஞ்சி ஆண்டவனே போற்றி
ஓம் ஹரிப்பாடு சுப்பிரமணியா போற்றி
ஓம் மூணாறு சுப்பிரமணியா போற்றி
ஓம் ஆதி நாகசுப்பிரமணியா போற்றி

ஓம் குக்கி சுப்பிரமணியா போற்றி
ஓம் பத்துமலை முருகா போற்றி
ஓம் பால தண்டாயுதபாணி போற்றி
ஓம் கொடி மலை முருகா போற்றி
ஓம் குமர வடிவேலா போற்றி

ஓம் செங்காங், வேல் முருகா போற்றி
ஓம் பஞ்சாங், முருகா போற்றி
ஓம் ஆரையம்பதி கந்தசாமி போற்றி
ஓம் கதிர்காமக் கந்தா போற்றி
ஓம் சித்திர வேலாயுதா போற்றி

ஓம் நல்லூர் கந்தசாமி போற்றி
ஓம் சிவசுப்பிரமணியா போற்றி
ஓம் சேயோன் செவ்வேள் போற்றி
ஓம் ஞானவேல் சக்திவேல் போற்றி

✡

துணைநூற் பட்டியல்

1. O. A. Wall, Eroticism in religions of the world
2. R.H. Kulkarni, Lajja Gouri - fertility and mother goddess worship (The New Indian Express 29th April 21)
3. Sheela na gig - architectural figure by John Harding (Britannica)
4. Wendy Diniger O'Flaherty, Women, Androgyns and other mythical beasts
5. www.wikipedia.com
6. Facebook
7. மயிலை சீனி வேங்கடசாமி, பௌத்தமும் தமிழும்
8. மணிமேகலை
9. ராகுல சாங்கிருத்தியாயன், வால்காவிலிருந்து கங்கை வரை, நற்றிணை பதிப்பகம், சென்னை 2024
10. சிவ விவேகானந்தன், நாகர் வரலாறு, காவ்யா பதிப்பகம்
11. முத்துநாகு, சுளுந்தி,
12. ஏகாம்பரநாதன், தென்பாண்டி நாட்டு சமணக் கோவில்கள்,

13. அமீஷ், நாகர்களின் ரகசியம்
14. சசிகலா கோ, அய்யன் சமூகம் தோற்றமும் வளர்ச்சியும், தமகம் பதிப்பகம் சென்னை 2024.
15. திரவுபதி அம்மன் வழிபாடு
16. தேமொழி, தமிழகத்தில் பௌத்தம்

✡

முன்னுரை

தமிழகத்தின் சமய வரலாற்றையும் வழிபாடுகளையும் மூன்று கட்டங்களாகப் பிரிக்கலாம். சமண பௌத்த சமய வரவுகளுக்கு முந்தைய காலம் பிந்தைய காலம் என்று இரண்டாகவும் பகுத்து ஆராயலாம்.

பழந்தமிழர் காலம் என்பது இயற்கை வழிபாடு மற்றும் முன்னோர் வழிபாடு நடந்த காலமாகும். இதற்கு அடுத்த நிலையில் வானியல், அறிவியல் சார்ந்த ஆசிவக சமயம் தமிழகத்தில் தோன்றியது. ஆனால் அசோக மாமன்னரின் கொலைத் தண்டனையால் முற்றிலும் அழிந்து போனது.

கி.மு 3ஆம் நூற்றாண்டில் சமண பௌத்த சமயங்கள் வந்த பிறகு சமணர்களின் ஆதிநாதர், ரிஷபநாதர் மற்றும் சில யட்ச, யட்சினிகளுக்குக் கோவில்கள் எழுப்பப்பட்டன. பௌத்தர்கள் இந்திரன், பிரம்மன், குபேரன், தாராதேவி, சிந்தாதேவி போன்ற தெய்வங்களுக்கு கோவில்கள் எழுப்பினர்.

இரண்டு மதங்களும் செல்வாக்கு இழந்த பிறகு கி.பி. ஏழாம் நூற்றாண்டில் ஆதிசங்கரர் அப்போது நடைமுறையில் இருந்த கடவுள் வழிபாடுகளை சாக்தம், கௌமாரம், சவுரவம், சைவம், வைணவம், காணாபத்தியம் என்று பிரித்தார். அத் பின்பு அகில

இந்திய அளவில் மிகப்பெரிய சமய மாற்றம் ஏற்பட்டது. இது மூன்றாவது காலகட்டம் ஆகும்.

அறுவகைச் சமயங்களும் சைவம் வைணவம் என்ற பெயரில் இரண்டு பிரிவுகளாக தெற்கேயும் வடக்கேயும் தோன்றின. ஆறு பிரிவுகளும் இரண்டிற்கு உள்ளே அடங்கிவிட்டன. முந்தைய காலகட்டத்தைச் சேர்ந்த கோவில்களும் வழிபாட்டு முறைகளும் சைவம் வைணவம் ஆகிய இரண்டு பிரிவிற்குள் அடங்கிவிட்டன.

ஒரு சில இடங்களில் மட்டும் கௌமாரமும் (முருகன்), சாக்தமும் (அம்மன்) காணாபத்தியமும் (கணபதி) தனித்தனியே நிலைத்து நின்றன. தனியாக முருகன் கோவில், அம்மன் கோவில், பிள்ளையார் கோவில் இருக்கும் திருத்தலங்களில் கூட சிவபெருமான் கோவில்களைச் சேர்த்தனர்.

முருகன் தனித்து நிற்கும் முக்கிய மலைக் கோவில்களில் கோவில்களின் அருகே அல்லது அடிவாரத்தில் சிவனுக்கு அம்மனுக்கும் ஒரு கோயில் கட்டி சைவ முத்திரை குத்தினர். பிள்ளையார்பட்டியில் மருதீஸ்வரர் சந்நிதி, வக்ரகாளி லலிதாம்பிகை சிறுவாச்சூர் போன்ற சக்தி/அம்மன் கோவில்களில் அருகில் அல்லது மலை அடிவாரத்தில் அல்லது அதே வளாகத்திற்குள் சிவன் கோவில்களையும் எழுப்பி சைவமயமாக்கினர்.

தமிழ்ச் சமய வரலாற்றில் நடுகல் வழிபாடு, கால தேவன் (சூரிய, சந்திர வணக்கம், பிறப்பு, இறப்பு

சார்ந்தவை) வழிபாடு, முன்னோர் வழிபாடு (முதியவர்கள் மற்றும் இளம் பெண்கள்) ஆகியவற்றைச் சமண பௌத்த மதங்கள் தங்களது கடவுளர் பெயரால் பல இடங்களில் மாற்றி அமைத்தன.

பௌத்த சமண சமயங்கள் செல்வாக்கு இழந்ததும் சைவமும் வைணவமும் அவர்களின் கோவில்களுக்கு வேறு சில கதைகளைக் கூறி சிவன் விஷ்ணு கோவில்களாக மாற்றிவிட்டன.

குன்றுதோறாடி வரும் பல முருகன் கோவில்களும் முதலில் குறிஞ்சி நில மக்களின் நடுகல் வழிபாடாகவும் சங்ககாலத்தில் வெறியாட்டு அயரும் மருளாடி வேலன் வழிபடும் முருகு என்ற ஆண் தெய்வத்தின் வழிபாடாகவும் விளங்கியது. பின்பு பௌத்தர்களின் மடாலயங்கள் இருந்த இடங்களில் முருக வழிபாடு பௌத்தர்களின் தலைமைத் தெய்வமான இந்திரனின் வீரத்தின் இளைய வடிவமாகமாற்றம் பெற்றது. இதுவே வடநாட்டில் இந்திரனின் மருமகன் என்றானது. இரண்டு வைதீகச் சமயங்களும் முருகனை தன்னுடைய உறவினர் ஆக்கிக் கொண்டன. சிவனுக்கு மகனாகவும் திருமாலுக்கு மருமகனாகவும் பார்வதிக்கு (சாக்தம்) மகனாகவும் கணபதிக்கு (காணாபத்தியம்) இளவலாகவும் முருகன் அறியப்பட்டான்.

ஆக, மலை மேல் உள்ள முருகன் வழிபாடு என்பது சுமார் 3000 ஆண்டுகளாக குமரன், அழகன், முருகன் என்று ஓர் இளைஞனின் வழிபாடாக / மகன்

வழிபாடாக தொடர்கின்றது. மலைக்கோயில் முருக வழிபாடு மனித வரலாற்றுடன் இணைந்து மிக நீண்ட பாரம்பரியம் கொண்டது.

மனித வரலாறு மலையில் இருந்து தான் தொடங்குகின்றது. மனிதர்கள் முதன் முதலில் குகைகளில் (குறிஞ்சித் திணை) வசித்தனர். பின்பு மெல்ல மெல்ல ஆடு மாடுகளைப் பழக்கி மலை அடிவாரத்திற்கு (முல்லைத் திணை) மேய்ச்சல் நிலத்தில் வந்து வாழ்ந்தனர். அதன் பின்பு ஆற்றுப் படுகைகளில் கூட்டம் கூட்டமாக குடியேறி நெல் வேளாண்மையும் (மருதத்திணை) வேளாண் தொழில் சார்ந்த பல துணைத் தொழில்களையும் ஊக்குவித்தனர்.

எனவே, குறிஞ்சிப் நிலக்கடவுள் மனித வரலாற்றின் பழைய கடவுளாகப் போற்றப்படுகின்றார்.

முருகனின் மலைக்கோவில்கள் காலத்தால் மிகப் பழையவை. அவற்றில் பவளமலை, பச்சைமலை, ஓதிமலை, தோரணமலை, குன்றக்குடி, செட்டிகுளம் ஆகிய கோவில்களைப் பற்றி இந்நூல் இன்றைய வழிபாட்டு முறைகளையும் பழைய வரலாறுகளையும் சேர்த்து விளக்குகின்றது.

நன்றி

செ. ராஜேஸ்வரி

✡

நூலாசிரியர் முனைவர் செ. இராஜேஸ்வரி

முனைவர் செ. இராஜேஸ்வரி கடந்த ஆறு ஆண்டுகளில் எழுதியும், மொழிபெயர்த்தும் வெளியிட்ட நூல்களின் எண்ணிக்கை 112 ஆகும். அவை மொழிபெயர்ப்பு, சமூகப் பண்பாட்டு ஆய்வு நூல்கள், கவிதைத் திறனாய்வு நூல்கள் எம்.ஜி.ஆர். திரைப்பட ஆராய்ச்சி நூல்கள், Sangam Classics in English என்று பல தரப்பட்டவையாகும். தமிழணங்கு மற்றும் Love Thamizh என்ற பெயரில் மாதந்தோறும் வரும் பன்மொழி மின்னிதழின் ஆசிரியர். எம்.ஜி.ஆர். மற்றும் கடவுளர் குறித்துப் பல காணொளிகளை வெளியிட்டுள்ளார்.

இவர் ஒரு மொழிபெயர்ப்பாளர், மொழியியலார், எழுத்தாளர், எம்ஜிஆர் திரைப்பட ஆய்வாளர், கல்லூரிப் பேராசிரியர், சமயப் பண்பாட்டு ஆய்வாளர், பதிப்பாளர் மொழி பெயர்ப்பியல் துறையில் முனைவர் பட்டம் பெற்றவர்.

1985 முதல் தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். பல துறை சார்ந்த பனுவல்களைத் தமிழில் மொழி பெயர்த்துள்ளார்.

1986 முதல் சமயச் சொல் அகராதி, எபிரேயம் - தமிழ் அகராதி; கிரேக்கம் - தமிழ் அகராதி உருவாக்கத் திற்காக

மக்கள் கல்வி அறக்கட்டளையின் இயக்குனர் மறைதிரு இராபின்சன் லேவி ஐயா அவர்களுடன் இணைந்து இருபது ஆண்டுகள் தீவிரமாகப் பணியாற்றினார். ஈரோடு மகளிர் கலை, அறிவியல் கல்லூரி, திருச்சி ஸ்ரீமத் ஆண்டவன் கலை, அறிவியல் கல்லூரி, மதுரை அமெரிக்கன் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் சில ஆண்டுகள் தமிழ் விரிவுரையாளராகப் பணியாற்றினார்.

1993 இல் ஆசியவியல் ஆய்வியல் நிறுவனத்தில் இணைப் பதிப்பாசிரியராகப் [Associate Editor] பணியாற்றினார். ஜப்பானிய மொழியைத் தமிழில் கற்பது எளிது என்பதை அறிந்து அதற்கான நூல் உருவாக்கும் பணியில் ஜப்பானியப் பெண் யூகோஃபுகுரோயியுடன் இணைந்து செயல்பட்டார்.

2000 இல் மதுரையில் அமெரிக்காவின் விஸ்கான்சின் பல்கலைக்கழக மாணவர்களுக்கு தமிழ் கற்பித்தார். வெளி நாட்டவருக்கு தமிழ் கற்பிக்கப் பாட நூல் ஒன்றை உருவாக்கினார். அரவிந்த் கண் மருத்துவமனையில் மொழி பெயர்ப்பாளராகவும் வேற்று மாநிலம் மற்றும் வெளிநாட்டு மருத்துவர்களுக்கு, தமிழ் ஆசிரியராகவும் பணியாற்றினார். அப்போது தமிழ் தெரியாத கண் மருத்துவர்களுக்குத் தமிழ் கற்பிக்க *Tamil for Non-Tamils* என்ற பாடநூலை உருவாக்கினார். அங்குச் செவிலியர் பயிற்சி பெறும் இளம் பெண்களுக்கு ஆங்கிலம் கற்பிக்க *Easy English* என்ற ஆங்கிலப் பாடநூலை உருவாக்கினார். மக்கள் கண்காணிப்பகத்தில் வெளி

மாநிலத்தவருக்கு ஆங்கிலமும் வெளி நாட்டவருக்குத் தமிழும் கற்பித்தார்.

தமிழ் கற்கும் வெளிநாட்டு மாணவர் களுக்காக சென்ட்டர் ஃபார் லேங்குவேஜ் ஸ்டடீஸ் *[Centre for Language Studies]* என்ற பெயரில் தனி மையம் ஒன்றை அமைத்து அவர்களுக்குத் தமிழ் கற்பித்தார்.

எம்.ஜி.ஆர். பற்றி "ஒப்பனையும் ஒரிஜினலும் எம்.ஜி.ஆர். *100*" என்ற தலைப்பில் விகடன்.காமில் முப்பது கட்டுரைகள் வெளியிட்டார். அதன் தொடர்ச்சியாக கனடாவில் இருந்து வரும் *www.tamilauthors.com* என்ற இணைய இதழில் தொடர்ந்து அறுபது கட்டுரைகள் எழுதினார். வெற்றித் திருமகன் எம்.ஜி.ஆர். என்ற பெயரில் தொடங்கும் வரிசையில் இருபத்தோர் நூல்கள் எழுதி வெளியுட்டுள்ளார்.

Her Book list Follows:

Books about MGR - His films and life (22)

Book on Ex-Mayor of Chennai Saithai S. Duraisamy

23. **சென்னைப் முன்னாள் மேயர் மனித நேயச் செம்மல் சைதை சா. துரைசாமி அவர்களின் சிறப்புத் திட்டங்களும் செயல்பாடுகளும்**

Books Translated from English to Tamil (6)

24. **இந்திய பெண்கள் சாதனைகளும், சவால்களும் -** **பேரா.ரீட்டாம்மா, முனைவர்.செ.இராஜேஸ்வரி** (Indian Women - Changes and Challenges (Co-Author) Nira Desai & Vibhuthi Betel) **நீரோட்டம் பதிப்பகம், மதுரை**

25. **உலக மயமாக்குதலும் நகரிய இறையியலும் - லாரி க்ரீன், பிரட்வெல் பேராயர், (இங்கிலாந்து திருச்சபை),** Theological Education through Living Literature (TELL) **வெளியீடு, அரசரடி, மதுரை**, 2004
26. Water Privatisation (for PET, Madurai)
27. Assisted reproductive technologies and it's Impact on Women (SIRD, Madurai)
28. Eco Vision and Mission
29. Bachelor's Study Materials for Social Science [IGNOU, Madurai]
    and others...

Poems of Muththamizh Virumbi Translated from Tamil to English (8)

30. Shade of the Flowering Tree
31. Songs of Dryness
32. Speaking with You
33. Language of Love
34. A Lady at the little gate
35. Honey Hive
36. Therapist of the Finest Art
37. Following Dusty Feet

Books of Dr.Gnanasekaran Translated from Tamil to English (6)

38. Emerging Mallarism
39. Festival of Lord Indra
40. Role of Devendirars in Indian war of Independence (Sundaralingam)
41. Mallariyan Literature

42. Re reading of Pallu literature
43. Frontyard without My Dad (Poem)

Tamil books on Socio Cultural Religious Studies (10)

44. பண்பாட்டு நகர்வுகள் (தமிழ் நாட்டில் இருந்து ஜப்பானுக்கு)
45. பெண் தெய்வ வழிபாடு
46. தேவேந்திரன்
47. மருதநிலப் பெண் தெய்வங்கள்
48. இருநிலத்தில் திருமுருகன்
49. முன்னோர் வழிபாடு
50. வேளாண்மரபில் விதைப்பும் பூப்பும்
51. யானைக் கடவுள்
52. பெண் பூப்பின் புனித வழிபாடு
53. வழிபாட்டின் வேர்களைத் தேடி

சமய வழிகாட்டி நூல்கள்

54. சாமிகளின் சரித்திரம் (வரலாறும் வழிபாடும்)
55. விரதங்களின் விளக்கம்
56. சாமிகளின் துதிகள் (27, 54, 108 போற்றி)
57. மலைக்கோயில்கள் - முருகன் (வழிபாடும் வரலாறும்)
58. அம்மன் கோயில்கள் (வழிபாடும் வரலாறும்)
59. திருமணத் திருத்தலங்கள் (வழிபாடும் வரலாறும்)
60. பிள்ளை வரம் அருளும் கோயில்கள் (வழிபாடும் வரலாறும்)

Poetry Criticism on MuthamizhVirumbi's Poems (5)

61. பாடுபொருளும் பாசப்பொருளும்
62. பூ மர நிழலின் களமும் காலமும

63. “2020 தைமாதத்தில் இன்று” கவிதையில் அடிக்கருத்தியல் ஆய்வு
64. கவிதையில் காதல்
65. பயணக் கவிதைகள்

Books on Translation Studies in Tamil (5)

66. மொழிபெயர்ப்பியல் ஆய்வு
67. கவிதை மொழிபெயர்ப்பு
68. நவீன மொழிபெயர்ப்பு உத்திகள் (Co-author)
69. மொழிபெயர்ப்பில் பெயரும் பொருளும்
70. Translating Tamil poetry

English Poems Translated to Tamil (5)

71. எட்டுத்திக்கும் செல்வீர்
72. அவன் கடவுளுக்கு நிகரானவன்
73. செக்கச் சிவந்த ரோஜா
74. மணலும் நுரையும் - கலீல் ஜிப்ரான்
75. பாடல்கள் 14 – கலீல் ஜிப்ரான்

Fiction (2)

76. அமராவதியின் காதல் (சிறுகதைகள்)
77. திருக்குறள் சிறுகதைகள் (பகை மாட்சி)

கவிதைகள் (3)

78. ரோஜா மொட்டு (கவிதை சித்திரங்கள்)
79. மகிழ் பேரின்பம் (poems)
80. பொன் வேலி

Tamil Classics in English (Selected Poems) (6)

81. Ainkurunuuru
82. Kurunthokai

83. Puranaanuuru
84. Pastoral Literature of Classic Tamil (Mullai Pattu & Mullai Kali)
85. A Classic Portrait of Ancient Madurai (Madurai - Kanchi)
86. Songs of Classic Tamil Poetess Avvai
87. The Winter's Tale in Classic Tamil (Nedu nal vaadai)

Didactic Literature (2)

88. Naaladiyaar
89. Aacharak Kovai

Medievel Literature (5)

90. A peasant with two wives (Mukoodal Pallu)
91. A Predictress from the Hill (Thiru Kutrala Kuravanji)
92. One line guidelines in Tamil
93. Madurai, a City of Prosperity (16th Century)

திருக்குறள் ஆய்வுநூல் வரிசை (2)

94. உலகத் தமிழர்களின் ஒரே நூல் - திருக்குறள்
95. வாழ்வியல் வழிகாட்டி - திருக்குறள்

Sangam Classics in Modern Tamil (1)

96. குறுந்தொகைக் கவிதைகள் (தற்காலத் தமிழில்)

Socio Cultural Study Series (2)

97. Lord Indra - the forgotten Deity
98. Serpent - The Primordial Deity

Studies on Tamil Grammar(1)

99. தமிழ் இலக்கணத்தில் வேற்றுமை உருபுகள்

Translation of a Tamil Novel

100. Genetic traits of Vengai anchor by Tamilmagan

Editor

101. Ambrosial kiss (A collection of articles on Muthamizh Virumbi's poems)
102. Love Thamizh 1 (Articles on History, Language and Literature of Tamils)
103. Love Thamizh - 2 Ancient Literature to Modern Cinema

பதிப்பாசிரியர் - தமிழணங்கு ஆய்வு நூல் வரிசை

104. மொழிபெயர்ப்பு நுண்ணாய்வு
105. மதுரை மூதூர்
106. எம்.ஜி.ஆர். பாடல்கள் ஆய்வு

ஜோதிட நூல்கள்

107. மேஷ ராசியின் சூட்சும ரகசியம்
108. ரிஷப ராசியின் சூட்சும ரகசியம்
109. நவரத்தினமும் உபரத்தினமும்
110. மிதுன ராசி சூட்சும ரகசியங்கள்
111. கடக ராசியின் சூட்சும ரகசியம்

தமிழிலிருந்து ஆங்கிலத்திற்கு (மொழிபெயர்ப்பு)

112. Amma (J. Jayalalitha) **(தமிழில் முனைவர் சந்திரிகா சுப்ரமணியன்)**

இதழாசிரியர்

- தமிழணங்கு - சமய, இலக்கிய, பண்பாட்டு மாத ஆய்விதழ் (2022 ஜூலை முதல்)

- Love Thamizh A multilingual journal for Tamils
- **சக்தி (பெண்ணிதழ்)**

செ. ராஜேஸ்வரியின் நூல்கள் பற்றிய திறனாய்வுகள்

- **செ. ரா.யின் மொழிபெயர்ப்புத் திறன்**
- **செ. ரா.யின் சங்க இலக்கிய மொழிபெயர்ப்பு**

சத்யபிரபா (செ. ரா) கவிதைகள் பற்றிய திறனாய்வு

- **சத்யபிரபாவின் கவியின்பம் - இ சக்தி**

Mega Collection

- Tamil Classic Poems of Love and Life (Ainkurunuru, Kurunthokai and Purananuru)
- **ஆங்கிலத் தேன் கவிதைகள்**
- **பெண் தெய்வ வழிபாடு - தோற்றமும் வரலாறும்**
- The Madurai

Awards

1. Best Translator Award from Nerunji Literary Movement, Trichy
2. Best Women Achiever Award, L. D. C. Madurai
3. **Best Translator Award, Government of Tamil Nadu. 2022**
4. Ilakkiya Viruthu, Muthamizh Sangam, Tiruppur
5. Sakthi Award, Makkal Maa manram, Tiruppur
6. Kalaimaamani Prof. Dr. Gnanasekaran Ilakkiya Viruthu, Coimbatore
7. **குறள்பணிச் செம்மல் விருது, தஞ்சைத் தமிழ் பல்கலைக்கழகம் & அகழ் அமைப்பு (பெரம்பலூர்).**
8. **சிறந்த பதிப்பகம் விருது** – 2023 **(சந்திரோதயம் பதிப்பகம்)**

❖

உள்ளடக்கம்

1.	பச்சைமலை பாலமுருகன் கோவில்	25
2.	பவளமலை முருகன் கோவில்	33
3.	ஓதிமலையின் ஐந்து தலை முருகன் கோவில்	39
4.	குன்றக்குடி முருகன் கோவில்	55
5.	தோரணமலை முருகன் கோவில்	72
6.	செட்டிகுளம் செங்கரும்புச் செவ்வேள்	96
7.	உத்தரவுப் பெட்டி உள்ள சிவன்மலை வள்ளி மணாளன்	109

முனைவர் செ. இராஜேஸ்வரி

1. பச்சைமலை பாலமுருகன் கோவில்

தமிழ்நாட்டில் கோபிசெட்டிபாளையத்தில் பச்ச மலையின் உச்சியில் இருக்கும் ஞான தண்டாயுதபாணி கோவிலில் முருகன் பால முருகனாகக் காட்சி தருகின்றார். இங்கு உலக அதிசயமாக செந்தில் ஆண்டவருக்கு 40 அடி உயர சிலை நிறுவப்பட்டுள்ளது.

பச்சமலைக் கோவில்

பச்சைமலைக் கோவில் கர்ப்பக்கிரகம்

பச்சைமலை பசுமையாகக் காட்சி தரக்கூடிய செடி கொடிகள் நிறைந்த மலை அல்ல. பாறையாகக் காட்சி தரும் மலை ஆகும். இக்கோயிலுக்கு ஒரு ஸ்தல வரலாறு உண்டு. பொதுவாக கொங்கு நாட்டு கோயில்களில் துர்வாசர் முக்கிய நபராக இடம் பெற்றுள்ளார். துர்வாச முனிவர் ஒரு முறை சிவபூஜைக்கு இடம் தேடி அலைந்தார். அப்போது மொடச்சூர் என்ற ஊர் அவருடைய ஞான திருஷ்டியில் சிறந்த இடமாகத் தோன்றியது. அங்குச் சென்று தம் தவத்தைத் தொடங்கியதும் அவர் மனம் ஒருநிலைப்படவில்லை. உடனே முருகனை நினைத்துத் தம் மனதுக்குள் வேண்டினார். அப்போது

அவர் மனதில் பச்சைமலை தோன்றியது. அம்மலையில் முருகன் அவருக்குக் காட்சியளித்தார். அதன் பின்பு துர்வாசர் பச்சைமலைக்கு வந்து பாலமுருகனை மேற்கு நோக்கிப் பிரதிஷ்டை செய்தார்.

பச்சைமலை முருகன் கோயில் அதிகமான பக்தர்கள் வராத கோவிலாக ஆரம்பத்தில் இருந்தது. 1956இல் குப்புசாமி கவுண்டர் என்பவரின் கனவில் முருகன் அசரீரியாகத் தன் கோயிலைப் புதுப்பித்து வழிபாடுகளை தொடர்ந்து செய்யும்படி தெரிவித்தார். அதன் பிறகு 1980 வரை குப்புசாமி கவுண்டர்

பச்சைமலை முருகன்

வேப்ப மரம்-அரசு-அத்தி மரம் - விநாயகர்

அவர்கள் கோயில் திருப்பணிகளைத் தொடர்ந்து செய்து வந்தார். அவரைத் தொடர்ந்து அவரது குடும்பத்தினர் திருப்பணிகளைச் செய்து வருகின்றனர். இத் திருப்பணிகளுக்குப் பிறகு இக்கோவில் ஒரு முழு கோவிலாக மாறியது.

மரகதாசலேஸ்வரர் என்ற பெயரில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. மரகதவல்லி என்ற பெயரில் அம்பாளுக்குத் தனிச் சந்நிதி அமைக்கப்பட்டது. மற்ற தெய்வங்களும் இங்கு சாந்நித்தியம் பெற்றன. வித்யா கணபதி கிழக்கு நோக்கி உள்ளார். முருக பக்தர் அருணகிரிநாதர் தெற்கு நோக்கி இருக்கின்றார்.

ஞான தண்டாயுதபாணி கோவில் மலை மேல் இருப்பதால் இக்கோவிலைச் சென்றடைய 181 படிகள் அமைக்கப்பட்டுள்ளன. இப்படிகளில் வள்ளி திருமணக் காட்சிகள் சுதைச் சிற்பங்களாக அழகுறக் காட்சி அளிக்கின்றன. கோவிலின் ஐந்து நிலை கோபுரம் கோபிச்செட்டி பாளையத்தின் எந்தப் பகுதியில் இருந்து பார்த்தாலும் தெளிவாகத் தெரியும் படி உயரமாக உள்ளது.

பச்சைமலை முருகன் கோவிலில் ஏழு கால பூஜை நடைபெறுகின்றது. பொதுவாக ஆறு கால பூஜை நடைபெறும். இங்கு ஏழு கால பூஜை நடைபெறுகின்றது. ஒவ்வொரு நாளும் மாலை 6:30

பச்சைமலை கோவில் வள்ளி, தெய்வானையுடன் மணக்கோலத்தில்

மணிக்குத் தங்கமயில் மீது முருகன் வலம் வருவார். அதன் பிறகு தங்கத் தேரில் திரு உலா வருவார். பின்பு அர்த்த ஜாம பூஜை நடைபெறும். அப்போது திருமுருகன் வெள்ளை உடை உடுத்து இருப்பார். ஒரு மணி நேரம் தமிழ் இலக்கியத்தில் திருமுருகாற்றுப்படை முதல் வேறு பல முருகன் பக்திப் பாடல்கள் பாடப்படும். இக்கோவிலில் தினை மாவும் ஞானப்பாலும் பிரசாதமாக வழங்கப்படும்.



தங்கமயில் மீது முருகன் வலம் வருதல்

பச்சைமலை கோயிலில் முருகனுக்கு லட்சார்ச்சனை பூஜை

பச்சைமலை முருகன் கோயிலில் முருகனுக்கு உகந்த செவ்வாய்க்கிழமைதோறும் சத்ரு சம்ஹார பூஜைகள் நடைபெறுகின்றன. சஷ்டி திதி மற்றும் கிருத்திகை நட்சத்திரத்தன்று சண்முகா அர்ச்சனை நடைபெறுகிறது. வைகாசி விசாகத்தன்று லட்சார்ச்சனை நடைபெறும்.

பங்குனி உத்திரம் இங்கு மூன்று நாள் விழாவாக வெகு சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. முதல் நாள் முருகனுக்குச் சிவப்பு சாத்தி சிவ ரூபமாகவும் அடுத்த நாள் வெள்ளை உடை சார்த்தி பிரம்ம ரூபமாகவும் மறுநாள் பங்குனி உத்திரத்தன்று பச்சை

பச்சைமலை கோவில் வெள்ளை உடை அணிந்த முருகன்

சாத்தி விஷ்ணு ரூபமாகவும் முருகனைக் கொண்டாடு கின்றனர். முருகன் இங்கு மும்மூர்த்தியாகத் தன் பக்தர்களுக்குச் சிவப்பு, வெள்ளை, பச்சை நிறங்களில் உடை உடுத்திக் காட்சியளிக்கின்றார்.

✡

முனைவர் செ. இராஜேஸ்வரி

2. பவளமலை முருகன் கோவில்

கோவை மாவட்டத்தில் பச்சமலை பவளமலை என்று இரண்டு மலைகள் உண்டு. இரண்டிலும் முருகன் கோவில்கள் உள்ளன. இக்கோவில்

ஈரோடு மாவட்டம், கோபிச்செட்டிபாளையம் அருகில்
அமைந்துள்ள பவளமலை அருள்மிகு முத்து குமாரசுவாமி
திருக்கோயிலின் அழகிய தோற்றம்

குமரக் கடவுள் வள்ளி தெய்வானையுடன்

காலத்தால் மிகவும் பிந்தியது. 19ஆம் நூற்றாண்டில் அண்மையில் கட்டப்பட்ட கோவிலாகும். பவளமலை முருகன் கோவில் கோபிசெட்டி பாளையத்தில் இருந்து பாரியூர் போகும் வழியில் முருகன் புதூர் அருகே உள்ளது.

பவளமலை சிறிய மலைக் குன்றாகும். இம்மலையின் மேல் குமரக் கடவுளாகிய முத்துக் குமாரசாமி வள்ளி தெய்வானையுடன் கோயில் கொண்டுள்ளார். இங்கு நவக்கிரக சந்நிதி உண்டு. இடும்பனுக்குத் தனி சந்நிதி உண்டு. முருகனின் தமையனான கணபதிக்கும் தனி சந்நிதி உண்டு.

திரி சதம்

பவளமலை முருகனுக்கு திரி சதம் என்னும் அர்ச்சனை செய்யப்படுகிறது. திரி சதம் என்றால் மூன்று X 100 எனப் பொருள் தரும். இந்திரனின் தலைமையில் தேவர்கள் செய்யும் அர்ச்சனை தான் திரி சதம் ஆகும். அதாவது 300 பெயர்களால் முருகனைப் போற்றி வணங்குவதாகும். திரிசத அர்ச்சனை சிவனுக்கும் விஷ்ணுவுக்கும் சக்திக்கும் செய்யப்படுவதுண்டு. இங்கு முருகனுக்கு இச் சிறப்பு அர்ச்சனை நடைபெறுகின்றது.

ஒரு முகத்துக்கு 50 போற்றி என ஆறுமுகத்துக்கும் 300 போற்றிகள் சொல்லப்படுகின்றன. திருமணத் தடை உள்ளவர்களும் குழந்தைப் பேறு

கோவிலின் முகப்பில் விநாயகர் சந்நிதி

இல்லாதவர்களும் திரிசத அர்ச்சனை செய்தால் தடை விலகி திருமணம் நடைபெறும். திரிசத அர்ச்சனை செய்து முருகனை வேண்டி கொண்டவர்களுக்கு நல்ல குழந்தை பிறக்கும்.

கைலாசநாதர்

பவளமலை முருகன் கோவிலில் சிவபெருமானும் எழுந்தருளி இருக்கின்றார். இங்கு அவருடைய பெயர் கைலாசநாதர். அம்மனின் பெயர் பெரிய நாயகி. புதிதாக சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து சந்நிதி எழுப்புவோர் கைலாசநாதர் என்றும் பெரிய நாயகி அம்மன்

என்றும் பெயர் சூட்டுவது மரபு. இங்கு எழுந்தருளி இருக்கும் கைலாசநாதர் சுயம்புவாக தோன்றிய சிவலிங்கம் ஆகும்.

புராணக்கதை

வாயு பகவானுக்கும் பூமியைத் தாங்கி நிற்கும் ஆதிசேஷன் என்ற ஆயிரம் தலை பாம்புக்கும் ஒரு முறை போட்டி வந்தது. இக்கதை வேறு பல தல புராணங்களிலும் இடம் பெற்றுள்ளது. இந்தத் திருத்தலத்திற்கும் இக்கதை வழங்குகின்றது. வாயு பகவான் கோபம் கொண்டு மிக வேகமாக வீசினார். கோரப் புயல் போல் காற்று அடித்த காரணத்தால் பூமியின் மீது இருந்த மேரு மலை நொறுங்கிச் சிதறியது. அவ்வாறு சிதறிய மலையின் ஒரு பகுதி தான் இந்தப் பவளமலை என்று தலபுராணம் கூறுகின்றது. இதே கதை சிவன்மலைக்கும் கூறப்படுகிறது.

கோவில் விழாக்கள்

பவளமலை முருகன் கோவிலில் கார்த்திகைப் பெருவிழா சிறப்பாக நடைபெறும். மலைக்கோவில் என்பதால் சித்ரா பௌர்ணமி முழு நிலா தரிசனம் சிறப்பு பூசைகள் உண்டு. முருகன் பிறந்த வைகாசி விசாகம் அன்றும் சிறப்பு வழிபாடுகள் நடைபெறும். சூரனை சம்ஹாரம் செய்த கந்த சஷ்டி மற்றும்

பவளமலை முருகன் வெள்ளி மயில் வாகனத்தில் காட்சி தருதல்

தைப்பூசம் ஆகிய நாட்களில் இங்குப் பக்தர்கள் கூட்டம் அதிகம் வரக் காணலாம். மூன்று கால பூஜை நடக்கின்ற இக்கோவிலில் தை மாசம் தேர்த்திருவிழா நடைபெறும்.

✡

3. ஓதிமலையின் ஐந்து தலை முருகன் கோவில்

ஓதிமலை கோவை மற்றும் திருப்பூரில் இருந்து சுமார் 48 கிலோமீட்டர் தொலைவில் இரும்பறை என்ற பகுதியில் உள்ளது. இரும்பொறை என்பது சேர மன்னர்களின் சிறப்புப் பெயராகும். சேர மன்னர்கள் ஆண்ட இப்பகுதியில் அவர்களின் பெயரால் மலை வழங்குவது இயல்பு. ஆனால் இந்த மலைக்குப் பெயர் காரணமாக ஒரு புராணக்கதை உள்ளது தான் வியப்பு. ஓதிமலை கோவிலின் தெப்போற்சவமும் தேரோட்டமும் இரும் பொறையில் கைலாசநாதர் கோயிலில் தான் நிகழ்கின்றன.

ஓதிமலையின் சிறப்பு

ஓதிமலையின் அருகில் வேறு பாறைகளோ குன்றுகளோ கரடுகளோ காணப்படவில்லை. இது தனி ஒரு குன்றாக ஆயிரம் மீட்டர் உயரத்தில் நிமிர்ந்து நிற்கின்றது. செங்குத்தான மலையாக இருப்பதால் இம்மலையில் ஏறி முருகனைக் காணச்



ஓதிமலை

செல்வது மிகவும் கடினமாக உள்ளது. படிக்கட்டுகளும் செங்குத்தாகவே உள்ளன.

மலைப்பாதையின் தொடக்கத்தில் பாத விநாயகர் சந்நிதி உள்ளது. போகும் வழியில் விக்கினங்கள் ஏதும் வரக்கூடாது என்று வேண்டிக் கொண்டு மலையேற வேண்டும். 1870 படிக்கட்டுகள் ஏறிச் செல்ல வேண்டும். 850 படிகள் ஏறியதும் அங்கே உள்ள வெள்ளை விநாயகர் சந்நிதி வரும். அதுவரை இடையில் நின்று ஆசுவாசப்படுத்திக் கொள்வதற்கென்று மண்டபங்கள் எதுவும் இல்லை.

வெள்ளை விநாயகரை வணங்கி மேற்கு நோக்கி ஏறினால் பரமேஸ்வரி அம்மன் சந்நிதி வரும்.

அதனை அடுத்து இன்னும் உயரமான பகுதியில் ஏறினால் இடும்பன் சந்நிதியைக் காணலாம். முருகனின் சந்நிதி கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. அண்மையில் 75 ஆண்டுகளுக்கு முன்பு தான் செங்கற்களால் கோவில் மண்டபங்கள் கட்டப் பட்டன. 1932 இல் கற்கோவிலும் விமானமும் எழுப்பப்பட்டது. இக்கோவில் மலை உச்சியில் ஒரு சிறிய சமதளப் பரப்பில் அமைந்துள்ளது.

ஓதிமலை முருகன் கோயிலில் மயில் மண்டபமும் மகா மண்டபமும் அர்த்த மண்டபமும் உண்டு. மகா மண்டபத்தின் விதானத்தில் 12



மலைப்பாதையின் தொடக்கத்தில் பாத விநாயகர்

விநாயகர் சந்நிதி

ராசிகளும் புடைப்புச் சிற்பங்களாகச் செதுக்கப் பட்டுள்ளன. அதனை அடுத்த அர்த்தமண்டபம் விசாலமான இடப்பரப்பை கொண்டது.

ஞானம் ஓதிய ஞான மலை

ஓதிமலையை ஞானமலை என்றும் அழைக்கின்றனர். இங்கும் திரிசத அர்ச்சனை சிறப்புடையது. இறைவனை 300 துதிகள் சொல்லி அர்ச்சனை செய்வது திரி (3) சத (100) முறை ஆகும். கோவைப் பகுதியில் திரிசத அர்ச்சனை பரவலாக நடைபெறுகிறது. இந்திரன் தேவர்களோடு சேர்ந்து பவளமலையிலும் திரிசத பூஜை செய்கிறான்.

பூ வரம் கேட்டல் என்பது இவ்வூரில் வேறு விதமாகக் காணப்படுகின்றது. முருகனின் உச்சியில் செவ்வரளி பூக்களை வைத்து பூ கீழே விழுந்தால் முருகன் அனுமதி கொடுத்து விட்டதாக மக்கள் நம்புகின்றனர். மற்ற ஊர்களில் இரண்டு தாள்களில் வெள்ளை மற்றும் சிவப்புப் பூக்களைப் பொட்டலமாகக் கட்டிப் போட்டு சிறு குழந்தையை விட்டு ஒரு பொட்டலத்தை எடுத்துத் தரச் சொல்வார்கள். அவர்கள் மனதில் நினைத்திருந்த பூ வந்தால் இறைவனின் அனுமதி கிடைத்து விட்டதாகப் பொருள். ஆனால் இங்கு பூ கேட்டல் அல்லது பூ வரம் தருதல் என்பது முருகனின் உச்சியில் இருந்து கீழே அரளிப் பூ விழுவதாக நம்பப்படுகிறது.

வெள்ளைப் பாறையும் மணலும்

போகர் யாகம் நடத்தி முருகனை வழிபட்ட இடம் என்று இம்மலையின் வட கிழக்கு பகுதியைச் சுட்டுகின்றனர். இங்குக் காணப்படும் மண் வெண்மை நிற மண் ஆகும். இது யாகத்தின் சாம்பலைப் போல் காணப்படுகின்றது. அருகில் உள்ள வெள்ளியங்கிரி மலையிலும் இத்தகைய வெண் மணலைக் காணலாம். அதனால்தான் அந்த மலைக்குப் பெயர் வெள்ளை மலை (வெள்ளையங்கிரி) என்று பெயர். வெள்ளை நிறப் பாறைகள் இருக்கும் இடத்தில் அந்த மண்ணைத் தொட்டு விபூதியாக பூசி கொள்கின்றனர்.

கோயில் வரலாறு

குன்றுதோறாடி வரும் குமரன் கோவில்கள் கொங்கு மண்டலத்தில் அதிகம். இங்குப் பச்சமலை, பவளமலை, திண்டல் மலை, சிவன்மலை, ஓதிமலை, மருதமலை என்று பல மலைகளில் முருகன் தனிப் பெரும் கடவுளாக எழுந்தருளியுள்ளார். **இக்கோவில்கள் சங்க இலக்கிய காலத்திற்கு முன்பிருந்தே குறிஞ்சி நிலக் கடவுளான முருகனின் கோவில்கள் ஆகும்.**

கிமு மூன்றாம் நூற்றாண்டில் வடக்கில் இருந்து தெற்கே பரவி வந்த பௌத்த சமயத் துறவியர் மலை மீது மடங்கள் அமைத்த போது இங்கிருந்த கோவில்களை தேவேந்திரன் மற்றும் பிரம தேவன் கோவில்களாக மாற்றினர். அவ்வாறே ஓதிமலையில் 5 முகம் கொண்ட பிரம்மன் கோவில் தோன்றியது. பட்டமங்கலம் குருபகவான் கோயிலில் ஐந்து முகம் கொண்ட முருகன் உள்ளார். இதுவும் பிரமதேவன் கோயில் ஆகும். பௌத்தம் அழிந்து சைவம் தலை எடுத்ததும் இக்கோவில் மீண்டும் முருகன் கோவிலாக மாறியது. ஆனால் பிரமதேவனின் ஐந்து முகம் கொண்ட சிலை மாற்றப் படவில்லை. அதற்குப் பல கதைகள் உருவாகின.

முருகனின் ஐந்து முகம்

ஓதிமலைக் கோவிலில் ஐந்து முகங்களும் எட்டுக் கரங்களும் கொண்ட குமார சுப்பிரமணியரை

ஐந்து முகம் கொண்ட முருகன்

தரிசிக்கலாம். இக்கோவிலில் முருகன் ருத்ராட்சப் பந்தலின் கீழ் சிவ சொரூபமாக எழுந்தருளியுள்ளார். இந்தக் குடவரைக் கருவறைக்குப் பெயர் திருக பீடம்.

முருகனுக்கு ஆறுமுகம் என்பது கந்தபுராணக் கதை. கந்தபுராணம் 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. அதுவரை முருகனுக்கு ஒருமுகம் அல்லது ஐந்து முகம் கொண்ட திருவருவங்கள் இருந்து வந்தன. அத்தகைய மிகப் பழமையான கோவில்களில் ஒன்று ஓதிமலை முருகன் கோவிலாகும்.

கதை 1

ஐந்து நான்கானது

பெரும்பான்மையான முருகன் கோவில்களில் பிரம்ம தேவனின் கர்வத்தை அடக்கிய கதை தான் ஸ்தல புராணக் கதையாக வழங்கி வருகிறது. மலை உச்சியில் பௌத்த துறவியர்களின் மடங்களும் மலை அடிவாரத்தில் அவர்களின் ஆலயங்களும் தோட்டங்களும் மருத்துவ சேவை மையங்களும் மக்களின் (பிரம்மன், இந்திரன், தாராதேவி, புத்தர்) வழிபாட்டுக் கூடங்களும் தற்காப்புக் கலைக் கூடங்களும் இருந்தன. ஐந்து முகம் கொண்ட பிரம்மனின் ஒரு தலையை வெட்டிய சிவபுராணக் கதை வருவதற்கு முன்பு பிரம்மதேவன் ஐந்து முகத்துடன் சகல சக்தி படைத்த கடவுளாக பௌத்த சமயத்தினரால் வணங்கப் பட்டான்.

சிவபெருமானுக்கு என்று எழுதப்பட்ட கதையில் பிரம்ம தேவனின் ஒரு தலையை கொய்ததற்கான காரணம் விசித்திரமானது. அக்கால கட்டத்தில் சிவனுக்கும் ஐந்து தலை இருந்தது. சிவன் என்று நினைத்துப் பிரம்ம தேவனைப் பார்வதி தேவி அணைத்துத் தழுவினாள். இதனால் பிரம்மன் மீது கோபம் கொண்ட சிவபெருமான் அவனது ஒரு தலையைக் கொய்தார். பிரம்மஹத்தி தோஷம் சிவபெருமானைப் பிடித்துக் கொண்டது. அதன் பிறகு பிரம்மன் நான்கு தலையோடு இருந்தார். சிவன் ஐந்து தலையுடன் இருந்தார்.

வழிபாட்டுக் கூடங்கள்

கதை 2

கை மாறிய படைப்புத் தொழில்

பிரம்மதேவன் ஓம் என்னும் பிரணவத்திற்கு பொருள் தெரியாது என்று முருகனிடம் திணறிய போது முருகன் பிரம்ம தேவனை சிறையில் அடைத்தார். படைப்புத்தொழிலை முருகனே மேற்கொண்டார். முருகன் படைத்த உயிர்கள் அனைத்தும் புண்ணியாத்மாக்களாக இருந்த காரணத்தினால் அவை எதுவும் சாகவில்லை. இதனால் பூமியின் பாரம் பெருகியது. பூமாதேவி திணறினாள்.

பூமாதேவி திருக்கயிலாயத்திற்குச் சென்று சிவபெருமானிடம் தன் துன்பத்தைத் தீர்க்கும்படி முறையிட்டாள். சிவபெருமான் முருகனிடம் சொல்லி பிரம்மதேவனை விடுவித்தார். விடுதலை பெற்ற பிரம்மதேவனிடம் படைப்புத் தொழில் மீண்டும் ஒப்படைக்கப்பட்டது. அவர் மீண்டும் வழக்கம் போல தன் படைப்புத் தொழிலைத் தொடங்கி புண்ணியாத்மாக்களையும் துர் பாவாத்மாக்களையும் படைத்தார். பூமியின் பாரம் குறைந்தது.

கதை 3

ஓதிமலை பெயர்க் காரணம்

பிரம்ம தேவனுக்கு ஓம் என்னும் பிரணவ மந்திரத்தின் பொருள் தெரியாத குற்றத்தினால் முருகன் அவரைச் சிறையில் அடைத்தார். இதனை அறிந்து சிவபெருமான் விரைந்து வந்து முருகனிடம் 'ஏன், இப்படிச் செய்தாய் அவர் வயதிலும் அனுபவத்திலும் பெரியவர் அல்லவா!' என்று கேட்டதும் 'வயதும் அனுபவமும் ஒருவரைப் பெரியவர் ஆக்கி விடுவதில்லை தந்தையே. ஒருவருடைய அறிவும் அனுபவமும் தான் அவரைப் பெரியவர் ஆக்குகின்றது' என்று முருகன் உறுதியாகப் பதிலளித்தார்.

முருகன் தன் தந்தையிடம் 'நீங்கள் சொல்லுங்கள். உங்களுக்கு ஓம் என்னும் பிரணவ மந்திரத்தின்

பொருள் தெரியுமா' என்று கேட்டான். சிவபெருமான் திணறினார். அவருக்கும் சட் என்று பதில் சொல்ல வரவில்லை. ஏனென்றால் அவருக்கு பிரணவ மந்திரத்தின் மூலப்பொருள் தெரிந்திருக்கவில்லை. உடனே முருகன் 'தந்தையே உங்களுக்குத் தெரியாவிட்டால் நான் சொல்கிறேன் கேளுங்கள்' என்றான். 'சரி சொல்' என்றார். 'நான் குரு ஸ்தானத்திலிருந்து சொல்கிறேன். நீங்கள் சிஷ்யன் ஸ்தானத்திலிருந்து கேட்கிறீர்கள். குருவுக்குரிய மரியாதையை நீங்கள் கொடுங்கள். அப்போது தான் நான் குருவாக இருந்து உங்களுக்கு பிரணவத்தின் பொருளை ஓதித் தர முடியும்' என்றான். அவர் கூறியதன் பொருளைப் புரிந்து கொண்ட சிவ

மலையின் கோவிலின் நுழைவு வாயில்

பெருமான் மண்டியிட்டு தலைவணங்கிக் குருவாக விளங்கும் முருகன் முன்பு பணிந்து நின்று ஓமென்னும் பிரணவத்தின் பொருளை ஓதும்படி வேண்டினார். முருகன் பிரணவத்தின் பொருளை ஓதிய மலை என்பதால் இம்மலை ஓதிமலை என்று பெயர் பெற்றது.

கதை 3

இரும்பொறை > இரும்பறை

பிரம்ம தேவனை சிறையில் அடைத்த இடம் அருகில் உள்ளது. அதன் பெயர் இரும்பறை (இரும்பு + அறை) என்று இரும்பறைக்கு பெயர் காரணம் சொல்லப்படுகிறது. ஆனால் இரும்பறை மலை என்பது இப்பகுதியை ஆட்சி செய்த இரும்பொறை என்ற சேர மன்னன் பெயரால் அழைக்கப்படுகிறது என்பது வரலாற்று ஆய்வாளர்களின் கருத்து. இரும்பறை என்று மாற்றி பிரம்மதேவனின் கதையை அதில் கொண்டு போய் சேர்ப்பது சைவப் பிரச்சார மார்க்கமாகும். சேர மன்னர்கள் இரும்பறை என்ற பட்டத்தை கொண்டு பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்தின் மேற்குப் பகுதியை ஆட்சி செய்து வந்தார்கள். இன்றையக் கேரளாவும் கொங்கு நாட்டின் சில பகுதிகளும் சேர மன்னர்களின் ஆட்சியின் கீழ இருந்தன. எனவே இந்த மலையை இரும்பொறை என்று சேரர் காலத்தில் அழைத்தனர் என்பதே பொருத்தமானது.

காசி விஸ்வநாதர் சாமி சந்நிதி

ஓதிமலையில் அடிவாரத்தில் ஒரு சிவலிங்கம் உள்ளது. அம்பாளுக்கு என்று சந்நிதி எதுவும் காணப்படவில்லை. ஆனால் மலைக்கு மேலே காசி விஸ்வநாதர் காசி விசாலாட்சி என்ற பெயரில் சாமியும் அம்மனும் தனித்தனி சந்நிதிகளில் எழுந்தருளியுள்ளனர்.

பூ வரம் கேட்டல்

இப்பகுதி வாழ் மக்கள் தங்கள் வீட்டில் நல்லது கெட்டது நடக்க தீர்மானிக்கும் போது முருகனிடம் வந்து பூ போட்டு பார்த்து முடிவு செய்கின்றனர். கல்வி தொழில் திருமணம் போன்ற நல்ல காரியங்களுக்கு இங்கு வந்து சிறப்பு வழிபாடு செய்கின்றனர்.



காசி விசாலாட்சி அம்மன் சந்நிதி

பூஜைகளும் சிறப்பு வழிபாடுகளும்

மற்ற முருகன் கோவில்களில் இருப்பது போலவே ஓதிமலை முருகன் கோயிலிலும் முருகன் பிறந்த கார்த்திகை நட்சத்திரம் அன்றும் சஷ்டி திதி என்றும் மற்றும் செவ்வாய், வெள்ளி நாட்களிலும் சிறப்புப் பூஜைகள் நடைபெறுகின்றன. சிவலிங்கம் இருப்பதால் அமாவாசைக்குச் சிறப்பு வழிபாடுகள் உண்டு.

கல்யாண சுப்ரமணியர்

ஓதிமலை முருகன் கோயிலில் தைப்பூசத்தன்று விசேஷமான பூஜைகள் நடக்கின்றன. முதல் நாள்

கொடியேற்றம் பின்பு சாமி, வள்ளி தெய்வானையுடன் மயில் வாகனத்தில் அடிவாரம் வரை சென்று வருகின்றது. ஐந்தாம் நாள் அன்று காலையில் முருகனுக்கு திருக்கல்யாண உற்சவம் நடைபெறுகின்றது. அன்று யானை வாகனத்தில் திருவீதி உலா வருகின்றார். அடுத்த நாள் பரி வேட்டையும் தெப்பத் திருவிழாவும் நடைபெறும். பின்பு மஞ்சள் நீர் உற்சவத்துடன் பத்து நாள் திருவிழா இனிதே நிறைவு பெறுகின்றது. தேரோட்டம் பரிவேட்டை தெப்பத் திருவிழா ஆகிய நிகழ்ச்சிகள் அருகில் இரும்பறையில் உள்ள கைலாசநாதர் கோவிலில் நடைபெறுகின்றன. திருக்கல்யாண நிகழ்ச்சி மட்டும் மலையில் நடைபெறுகின்றது. இதனால் முருகன் கல்யாண சுப்ரமனியர் என்று அழைக்கப்படுகிறார்.

தைப்பூசத் திருவிழா

கதை 4
வழியில் தங்கிய ஒரு முகம்

முருகன் எழுந்தருளியிருக்கும் மலைகளில் சித்தர்களோடு தொடர்பு கொண்ட கதைகளும் இப்பகுதியில் வழங்கி வருகின்றன. பழனிக்குப் போக விரும்பிய போகருக்கு வழி தெரியாத காரணத்தினால் அவர் முதலில் ஓதிமலையில் வந்து தங்கி இருந்தார். இங்கு இருக்கும் முருகப் பெருமானை வணங்கி தனக்குப் பழனி மலைக்குச் செல்ல வழி காட்டும்படி வேண்டினார். அவர் வேண்டுதலுக்குச் செவி சாய்த்த முருகன் மனிதரைப் போல ஒரே முகத்துடன் போகருக்கு வழிகாட்ட வந்தார். சிறிது தூரம் வந்து குமாரபாளையம் நாகநாத ஈஸ்வரர் கோவில் இருக்கும் இடத்தில் நின்று அங்கிருந்து போகரை போகச் சொல்லி விட்டு முருகன் அங்கு தங்கிக் கோவில் கொண்டு அருளினார். அவருடைய ஒருமுகம் இங்கே இருக்கின்றது. மற்ற ஐந்து முகங்கள் ஓதிமலையில் இருப்பதாக ஒரு கதை உலவுகிறது.

நேர்த்திக்கடன்கள்

மற்ற முருகன் கோவில்களில் உள்ள நேர்த்திக் கடன்களைப் போலவே ஓதிமலை முருகன் கோவிலிலும் மக்கள் நேர்த்திக் கடன்கள் நிறை வேற்றுகின்றனர். முருகனுக்கு செவ்வரளி மாலை கிருத்திகை நாளில் சாற்றி அர்ச்சனை செய்து வழி பட்டால் திருமணத்தடை குழந்தை பேறின்மை நீங்கும்.

✡

4. குன்றக்குடி முருகன் கோவில்

சிவகங்கை மாவட்டத்தில் காரைக்குடியில் இருந்து மதுரை செல்லும் வழியில் எட்டுக் கிலோமீட்டர் தொலைவில் குன்றக்குடி முருகன் கோவில் அமைந்துள்ளது. பிள்ளையார்பட்டியில் இருந்து நான்கைந்து கிலோமீட்டர் தொலைவில் இக் கோவில் இருப்பதால் பிள்ளையார்பட்டிக்குச் செல்லும் பக்தர்கள் அருகில் உள்ள குன்றக்குடி முருகன் கோவிலுக்கும் சென்று இறைவனை தரிசித்து வருவதைக் காணலாம்.

குன்றக்குடி முருகன் கோவில்

குன்றக்குடி மலை மயில் வடிவில் காணப்படுகிறது. இம்மலைக்கு மயில்மலை, அரச வனம், கிருஷ்ண நகரம், சிகண்டி மலை, மயூர கிரி, என்று பல பெயர்கள் உண்டு.

மருது பாண்டியரின் திருப்பணிகள்

1780ல் சிவகங்கைச் சீமையை ஆட்சி செய்த பெரிய மருது பாண்டியருக்கு முதுகில் ராஜபிளவை ஏற்பட்டது. அப்போது அவரைச் சந்திக்க வந்த காடன் செட்டியார் குன்றக்குடி முருகன் கோவிலின் விபூதியை அந்த பிளவையில் பூசவும் பிளவை சுகமாகிவிட்டது. நோய் குணமடையவும் மனம் மகிழ்ந்த பெரிய மருது குன்றக்குடி முருகன்

குன்றக்குடி முருகன் கோவில் மலைக்கு செல்லும் பாதை

கோவிலுக்குப் பல திருப்பணிகளைச் செய்தார். தான் அடிக்கடி அங்கு வந்து தங்கிய இறைவனை வழிபட தனக்கென்று ஒரு அரண்மனையும் கோயிலின் அருகினில் கட்டினார்.

கோவிலுக்குத் தென் திசையில் தீர்த்தக் குளத்தைச் சரி செய்து படித்துறைகள் அமைத்தார். சுற்றிலும் தென்னைமரங்கள்வைத்துஅப்பகுதியைகுளிர்ச்சியாக மாற்றினார். இன்றும் அவருடைய பெயரால் அந்த ஊருணி மருதாவூருணி எனப்படுகின்றது.

மூலவர் சந்நிதிக்கு முன்பு மயில் மண்டபமும் உற்சவர் சந்நிதிக்கு முன்பு அலங்கார மண்டபமும் எழுப்பினார். ராஜகோபுரமும் கட்டினார். அதன் அடிப்பகுதியில் மருது பாண்டியன் உபயம் என்ற எழுத்துக்களைப் பொறித்து உற்சவமூர்த்திக்குத் தங்கக் கவசமும் செய்து சாத்தினார். உற்சவத்துக்குத் தேர் செய்து கொடுத்தார். தைப்பூச நன்னாளன்று தேர்த் திருவிழா மருது பாண்டியரின் பெயரால் நடந்து வருகிறது. தனக்கு விபூதி பூசிக் குணமளித்த காடன் செட்டியார் பெயரிலும் ஒரு மண்டகப்படி கட்டிக் கொடுத்தார். அன்னதானச் சத்திரமும் கட்டினார்.

கதை

மயில் மலை

குன்றக்குடி மலை முருகனின் சாபம் பெற்றதால் மயில் மலையாகக் காட்சியளிக்கின்றது.

தங்கக் கவசம் அணிந்த குன்றக்குடி சண்முகநாதப் பெருமான்

இதற்கென்று ஒரு கதையும் வழங்குகின்றது ஒருமுறை முருகனைப் பார்க்க திருமாலும் பிரம்மனும் வந்தார்கள். அவர்கள் ஏறி வந்த கருடனும் அன்னப் பறவையும் முருகனின் அரண்மனை வாயிலில் நின்றன. அங்கிருந்த மயில் விநாச காலே விபரீத புத்தி என்ற கருத்துக்கு இணங்க அடுத்தவரின் பேச்சைக் கேட்டு சரியாக ஆராயாமல் கருடனையும் அன்னத்தையும் உண்டு விட்டது. முருகனைப் பார்த்துவிட்டு வெளியே வந்த திருமாலும் பிரம்மனும் தங்கள் வாகனங்களைக் காணாமல் திகைத்து நின்றனர். முருகனிடம் முறையிட்டனர். முருகன் மயிலின் சதியை உணர்ந்து

அவற்றைத் திரும்பக் கொடுக்குமாறு பணித்தார். கருடனும் அன்னமும் திரும்பக் கிடைத்தன. திருமாலும் பிரம்மனும் கிளம்பிச் சென்றனர். முருகன் மயிலை பூலோகத்திற்கு போய் மலையாகக் கிடக்கும்படி சபித்தார். 'ஐயா அறியாமல் செய்துவிட்டேன் என் பாவத்திற்குப் பிராயச்சித்தம் வழங்குங்கள்' என்ற மயில் கேட்கவும் 'நான் குன்றக்குடிக்கு வந்து உனக்குச் சாப விமோசனம் தருவேன்' என்றார். ஒரு நன்னாளில் முருகன் குன்றக்குடிக்கு வந்ததும் மலையை மீண்டும் மயிலாக மாற்றினார். மயில் வந்த பிறகும் கூட அந்த மலை மயில் வடிவிலேயே இருந்தது. முருகன் அந்த மலையின் உச்சியில் கோயில் கொண்டு அருளினார்.

கருவறை நாதர்

குன்றக்குடி குகைக் கோவிலின் கருவறையில் முருகன் ஒரே கல்லில் மயில் மீது அமர்ந்திருக்கும் கோலத்தில் காட்சி தருகிறார். மூலமூர்த்தமும் திருவாச்சியும் ஒரே கல்லில் அமைந்துள்ளது. அருகில் வள்ளியின் தெய்வானையும் தனித்தனி கற்களில் மயிலில் அமர்ந்திருப்பது போல செதுக்கப்பட்டுள்ளனர். இக்கோலம் வேறெந்த கோயிலிலும் காணக் கிடைக்காத கோலம் ஆகும். இங்குக் கிழக்கு நோக்கி எழுந்தருளியிருக்கும் மூலவரான சண்முக நாதர் ஆறுமுகங்களுடன் பன்னிரு கரங்களுடன் காட்சியளிக்கின்றார்.

முருகன் வள்ளி, தெய்வானையுடன் காட்சியளித்தல்

மயிலின் மீது அமர்ந்து இடது காலை மடித்து வலது காலைத் தொங்கவிட்டுள்ளார்.

குன்றக்குடி கருவறை நாதருக்கு

செட்டிமுருகன், குன்றைஊரன், குன்றை முருகன், குன்றை உடையான், மயூரகிரி நாதன், மயில்கலை கந்தன், தேனாறுடையான் என்று முருகனுக்குப் பல பெயர்கள் உள்ளன. இம் முருகனை சூரியன், நாரதர், விசுவாமித்திரர், வசிஷ்டர், கருடன், இந்திரன், மன்மதன் ஆகியோர் வணங்கி வரம் பெற்றதாகத் தலபுராணக்கதை குறிப்பிடுகின்றது. பாண்டவரும் அகத்தியரும் வந்து வணங்கியதாகவும் கதைகள் உள்ளன. அருணகிரிநாதர் தன்னுடைய திருப்புகழிலும் பாம்பன் சுவாமிகள் தன்னுடைய

பக்திப் பாடல்களிலும் குன்றக்குடி முருகனைச் சிறப்பித்துள்ளனர்.

படிக்கட்டுகள்

குன்றக்குடி முருகன் கோவிலுக்கு மேலே ஏறிச் செல்ல 149 படிகள் உள்ளன. பக்தர்கள் இளைப்பாறும் வகையில் பல மண்டபங்களும் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ளன. மலை மேல் இருக்கும் இக்கோவில் ஒரே திருச்சுற்று மட்டுமே உள்ளது.

சிவன் சந்நிதி

மலையின் அடிவாரத்தில் சிவபெருமானுக்குத் தனிக் குடவரை கோவில் உள்ளது. இங்கு எழுந்தருளியிருக்கும் சிவபெருமானின் பெயர்

பக்தர்கள் இளைப்பாறும் மண்டபத்துடன் அமைந்த படிக்கட்டுகள்

மலையின் அடிவாரத்தில் சிவபெருமானின் சந்நிதி

தேனாற்று நாதராகும். தேனாற்றுநாதர் சுயம்பு மூர்த்தியாகத் தோன்றியவர். இவரை அகத்திய முனிவர் வணங்கி வழிபட்டார் என்று தல புராணக் கதை கூறுகின்றது. அம்மன் அழகம்மை என்றும் அருள் சக்தி என்றும் அழைக்கபடுகின்றார்.

சிறுச்சுற்றுக் கோவில்கள்

மலையைக் கீழ் இருந்து மேல் நோக்கிப் பார்க்கும்போது அது மயில் தோகை விரித்து இருப்பது போலத் தோன்றுவதால் அதன் கீழே இருக்கும் விநாயகப் பெருமானுக்கு தோகையடி விநாயகர் என்று பெயர். அவரை வணங்கிய பின்பு மலையேறிச் சென்று முருகனை தரிசிக்க வேண்டும்.

இதற்குச் சற்று அருகில் வல்லப கணபதிக்கு தனி சந்நிதி உண்டு. அங்கு அவர் தேவியுடன் காட்சி அளிக்கின்றார். முருகனுக்குக் காவடி எடுத்துச் செல்லும் இடும்பனுக்கும் தனிச் சந்நிதி உள்ளது. 17 ஆம் நுற்றாண்டுக்குப் பிறகு கட்டப்பட்ட கோயில் என்பதால் கந்த புராணத்தில் வரும் வீரபாகுவுக்கும் ஒரு தனி சந்நிதி உண்டு.

கோயிலுக்குள்

கருவறையைச் சுற்றியுள்ள பிரகாரத்தில் தட்சிணாமூர்த்தி, பாலமுருகன், சொர்ண கணபதி, பைரவர், நடராஜர் ஆகியோரர் உள்ளனர். காசி விஸ்வநாதரும் விசாலாட்சியும் தனிச் சந்நிதியில்

மருதுபாண்டியர் சிற்பம்

உள்ளனர். ஈசான்ய மூலையில் நவகிரக சந்நிதியும் உள்ளது. மருதுபாண்டியர் கட்டிய அலங்கார மண்டபத்தில் அவர்களின் உருவச் சிலைகள் காணப்படுகின்றன.

மயில் மண்டபத்தில் கொடிமரமும் பலிபீடமும் உள்ளது. இக்கோவிலின் தலவிருட்சம் அரச மரமாகும். இப்பகுதி முன்பு அரசு வனம் என்று அழைக்கப்பட்டது. இத் தலத்தின் தீர்த்தம் தேனாறு எனப்படுகிறது. சமண பௌத்தர்கள் வாழ்ந்த



துவார பாலகர் - அருகில் பிராமி கல்வெட்டு

இம்மலைப் பகுதியில் சமணர்களின் கல் படுக்கைகள் காணப்படுகின்றன பௌத்தர்களின் பிராமிக் கல்வெட்டுகளும் உள்ளன. பாண்டியர் கட்டிய ராஜகோபுரம் தெற்கு நோக்கி அமைந்துள்ளது.

விழாக்கள்

மற்ற முருகன் கோவில்களைப் போலவே குன்றக்குடி முருகன் கோவிலிலும் வைகாசி விசாகம், கார்த்திகை தீபம், தைப்பூசம், பங்குனி உத்திரம் போன்ற விழாக்கள் சிறப்பாக நடைபெறுகின்றன. சித்திரை மாதம் பால் பெருக்கு விழாவும் ஆனியில் மகாபிஷேகமும் ஆடியில் திருப்பணி பூஜையும் ஆவணி மாதம் புட்டுத் திருவிழாவும் புரட்டாசி மாதம் அம்பு போடும் திருவிழாவும் ஐப்பசியில் சூரசம்ஹாரமும் கார்த்திகையில் திருக்கார்த்திகையும் இக்கோவிலில் சிறப்பாக நடைபெறுகின்றன.

திருமணத் திருத்தலம்

குன்றக்குடி மலையில் சண்முகநாதப் பெருமான் வள்ளி தெய்வானையோடு இணைந்து காட்சி அளிப்பதால் இத்தலத்தில் திருமணம் செய்யும் மணமக்களின் திருமண வாழ்க்கை மகிழ்ச்சியாக அமையும். எனவே இம்மலை கோயில் திருமணத் திருத்தலமாக அமைகின்றது.

சூரனை வதம் செய்யும் சூரசம்ஹாரம் திருவிழா

நோய் தீர்க்கும் மருத்துவத்தலம்

மருது பாண்டியரின் நோய் குணமானதால் இம் முருகனுக்கு நோயை குணமாக்கும் சக்தி உண்டு.

கலிங்க நாட்டு இடும்பன் காவடி எடுத்து வந்து வழிபட்டு வயிற்று வலி நீங்கியதாக ஒரு கதை நிலவுகின்றது. இதனாலும் இத்தலம் மருத்துவ திருத்தலம் ஆகும்.

நேர்த்திக்கடன்கள்

குன்றக்குடி முருகன் கோவிலில் சில வித்தியாசமான நேர்த்திக்கடன்களும் பக்தர்களால் நிறைவேற்றப்படுகின்றன. அவற்றில் ஒன்று, கும்பிடு தண்டம் என்பதாகும். கோயிலைச் சுற்றி தொடர்ந்து கும்பிட்டு விழுந்து கொண்டே வர வேண்டும்.

அடிப்பிரதட்சனம்

அடி பிரதட்சணம் என்பது அடி மேல் அடி வைத்து கோவிலைச்சுற்றி வருவதாகும். அங்கப் பிரதட்சணமும் உண்டு. ஆண்கள் இங்கு அங்கப் பிரதட்சணம் செய்கின்றனர். பெண்களின் மார்பு மண்ணில் படக்கூடாது என்ற காரணத்தினால் அங்கப் பிரதட்சணம் செய்வதில்லை. அவர்கள் அடிப் பிரதட்சண நேர்த்திக்கடன் மட்டும் நிறை வேற்றுகின்றனர்.

காவடி

பால்காவடி, பன்னீர்காவடி, பறவைகாவடி போன்ற காவடிகள் எடுத்து வந்தும் பால்குடம் எடுத்து வந்தும் பக்தர்கள் தங்கள் நேர்த்திக்

முருகனுக்கு காவடி எடுத்தல்

கடன்களை நிறைவேற்றுகின்றனர். பங்குனி உத்தரத்தன்றும் தைப்பூசத்தன்றும் செட்டியார் இனத்தைச் சேர்ந்த மக்கள் அதிகமானோர் காவடி எடுத்து வருகின்றனர். 'குன்னக்குடிக்கு அன்னக் காவடி எடுத்தாலும்...' என்ற பழமொழி குன்றக்குடி காவடியின் மதிப்பை உணர்த்த வல்லது.

கோட்டைக் காவடி

குன்றக்குடி முருகன் கோவிலுக்கு விவசாயிகள் தங்கள் முதல் விளைச்சலைக் காணிக்கையாக செலுத்து கின்றனர். வைக்கோல் விரித்து அதில் நெல்லைக் கொட்டிப் பொதிந்து திரித்துக் கட்டிக் கொண்டு வந்து கோவிலுக்குக் காணிக்கை செலுத்துகின்றனர். இந்த நெல் பொதிக்குக் 'கோட்டை' என்று பெயர். மதுரை அழகர் கோவிலிலும் இத்தகைய கோட்டையைத் தலையில் சுமந்தபடி பக்தர்கள் கொண்டு போய் கோவிலில் காணிக்கை செலுத்துவர். குன்றக்குடி முருகன் கோவிலில் இதனை 'கோட்டை காவடி' என்று அழைக்கின்றனர். இச்சிறப்பு இக்கோவிலுக்கு மட்டுமே உண்டு.

தத்துக் கொடுத்தல்

காரைக்குடி பகுதியில் பல கோவில்களில் குழந்தைகளைத் தத்து கொடுத்து வாங்கும் முறை காணப்படுகின்றது. செட்டியார் சமுதாயத்தில் வாரிசு இல்லாதவர்கள் தமது உறவினரின் குழந்தையைத் தத்தெடுக்கும் பழக்கம் உள்ளது. தங்கள் குழந்தைகளுக்கு ஆயுள் தோஷம் இருந்தால் அல்லது

பிள்ளைகளால் பெற்றோருக்குத் தோஷம் இருந்தால் இக்கோவிலில் குழந்தையை முருகனுக்குத் தத்தாகக் கொடுத்து விடுகின்றனர். திருக்கோஷ்டியூர் சௌமிய நாராயணப் பெருமாள் கோயில், குன்றக்குடி முருகன் கோவில் போன்ற கோவில்களுக்குத் தத்துக் கொடுத்த பின்பு இறைவனுக்குரிய அக் குழந்தையை குழந்தையின் பெற்றோர் வளர்ப்புப் பெற்றோர் போல இருந்து வளர்க்கின்றனர். குழந்தை கோயிலுக்குரிய குழந்தையாகவே இவர்களிடம் வளர்கின்றது. இதனால் குழந்தைக்குரிய தோஷங்கள் பெற்றோரையும் குழந்தையையும் தாக்காது.

வெள்ளி உறுப்பு காணிக்கை

மேலும் நோய் வந்தவர்கள் நோய் தீர வேண்டும் என்பதற்காக இறைவனை வேண்டிக்கொண்டு எந்த உறுப்பில் நோய் வந்ததோ அந்த உறுப்பை வெள்ளியில் செய்து வாங்கி உண்டியலில் செலுத்துகின்றனர்.

உப்பும் மிளகும்

கோயில் தீர்த்தத்திலும் இடும்பன் சந்நிதியிலும் பக்தர்கள் உப்பும் மிளகும் வாங்கிக் காணிக்கையாக செலுத்துகின்றனர். உப்பு கரைவது போல பக்தர்களின் தோல் நோய் காணாமல் போய்விடும்.

அரிசி தூவுதல்

பறவைகளுக்கு உணவிட வேண்டும் என்ற காரணத்திற்காக அரிசி கொண்டு வந்து மலைப்

படிகளில் ஏறும் போது தூவிச் செல்கின்றனர் இந்த நேர்த்திக்கடன் இக்கோயிலின் தனிச்சிறப்பாகும்.

வேள்வி & அர்ச்சனை

குன்றக்குடி முருகன் கோவிலில் வேள்வி நடத்துவதாகவும் சிறப்பு அர்ச்சனை செய்வதாகவும் நேர்ந்து கொள்கின்றனர். தங்களுடைய நேர்ச்சை நிறைவேறியதும் சண்முகார்ச்சனை மற்றும் சண்முக வேள்வி நடத்துகின்றனர். குன்றக்குடி கோயில் இங்கு வந்து வணங்கும் பக்தர்களுக்குத் திருமணம் நடைபெறவும் நோய் தீரவும் உதவுகின்றது.

முன் வரலாறு

குன்றக்குடி மலையில் சமணர்கள் வாழ்ந்ததற்கான அடையாளமாகக் கற் படுக்கைகள் உள்ளன. சமணர்கள் கழுவேற்றத்துக்குப் பின்பு இவர்கள் இங்கிருந்து போயிருக்கலாம் அல்லது சைவத்துக்கு மாறியிருக்கலாம். சமனர்கள் வருவதற்கு முன்பு அரிட்டாபட்டி, குன்றக்குடி, அய்யனார்குளம் பாண்டி கோயில் மற்றும் ஏரி, குளங்களுக்கு அருகே உள்ள அய்யனார் கோயில்கள் என பௌத்த செல்வாக்கு மிகுந்து காணப்பட்டது. சமன பௌத்தர்கள் மலைகளில் வசித்ததற்கு கல்வெட்டுச் சான்றுகளும் உள்ளன.

பௌத்தர்கள் கௌதமர் ஞானோதயம் பெற்ற அரச மரங்களை வளர்த்தனர். வளர்க்கும்படி பொது

கோவிலில் உள்ள சமணரின் சிற்பம்

மக்களையும் ஊக்குவித்தனர். குன்றக்குடியும் பௌத்தர்கள் வாழ்ந்த அரசவனம் ஆகும்.

பௌத்தர்கள் இம்மலையின் அடிவாரத்தில் மருத்துவ சேவை செய்துள்ளனர் என்பதை இக் கோயிலின் மருத்துவ நேர்ச்சைகள் உணர்த்துகின்றன.

பௌத்தர்கள் மனிதர்களுக்கு மட்டும் அல்லாது விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் செய்த சேவையின் தொடர்ச்சியாகவே பசுமாடுகளுக்கு அகத்திக்கீரை கொடுப்பதும் பறவைகளுக்கு உணவு தானியம் கொடுப்பதும் எறும்புகளுக்கு அரிசி மாவில் கோலம் போடுவதும் தொடர்கின்றன. இதன் மிச்ச சொச்சமாகவே குன்றக்குடியில் படி ஏறும்போது அரிசி தூவுகின்றனர்.

✡

5. மருத்துவச் சிறப்புடைய தோரணமலை முருகன் கோவில்

தென்காசி மாவட்டத்தில் மேற்குத் தொடர்ச்சி மலையின் அடிவாரத்தில் கடையம் என்ற ஊருக்கு அருகே தோரணமலையின் உச்சியில் உள்ள முருகன் கோவில் மருத்துவச் சிறப்புடையதாகும். 1193 படிகள் ஏறி இம்முருகனை தரிசிக்க வேண்டும். அகத்தியரும் தேரையரும் தங்கி இருந்த இடம் இத்திருத்தலமாகும். தேரையரே இக்கோவிலைக் கட்டி இங்கு முருகனைப் பிரதிஷ்டை செய்ததார் என்றும் கூறுவர். இது தேரையரின் புகழ் பாடும் தலமாகும். அவருடைய ஜீவ சமாதி இங்கே உள்ளது. சித்தர்கள் வாழ்ந்து மறைந்த இடங்களில் முருகன் கோயில் கட்டும் மரபு 16ஆம் நூற்றாண்டில் தோன்றியது. இக்கோவிலில் சமூகப் பணிகள் பல நடைபெறுகின்றன. கொரோனா காலத்தில் இங்கு தினமும் அன்னதானம் வழங்கியது இதன் தனிச் சிறப்பாகும். இக்கோயில் கிரிவலத்துக்குச் சிறப்பு பெற்ற கோவில் ஆகும். கிரிவலம், பாத தரிசனம், முடி காணிக்கை, மருத்துவ சேவை போன்றன



தோரணமலை

இக்கோயிலுக்கு பௌத்த சமயத்துடன் முன்பிருந்த தொடர்பை உறுதி செய்கின்றன. மேலும் மருத்துவ சேவை நடந்த இடம் என்பதை உறுதி செய்யும் வகையில் பல கதைகள் வழங்குகின்றன.

குகைக் கோவில் சிறப்பு

மலை உச்சியில் குகையில் குடையப்பட்ட கோவிலாக முருகன் கோவில் உள்ளது. அதற்கு எதிரே பழைய பத்திரகாளியம்மன் கோவில் ஒன்றும் உள்ளது. தற்போது முருகன் கோவிலே முக்கியக் கோவிலாகவும் வடக்கு வாய்ச் செல்வியான அம்மன் கோவில் காளியம்மன் கோவில் என்ற பெயரில் துணைக் கோவிலாகவும் மாறிவிட்டது. மலைக்கோவிலில் உள்ள முருகன் கிழக்கு நோக்கி

திருச்செந்தூரைப் பார்த்து இருப்பதால் திருச்செந்தூர் முருகனை வழிபட்ட பலனை இங்கே தோரணமலை முருகனை வழிபட்டே பெறலாம்.

கருவறை நாதரின் தோற்றம்

மேலே மலைக் குகையில் உள்ள முருகன் இரண்டு கைகளுடன் ஒரே முகத்துடன் காட்சி யளிக்கின்றார். இங்கு முருகனுக்கு ஆறுமுகம் 12 கைகள் போன்றவை கிடையாது. அவர் கையில் வேலும் அருகில் மயில் வாகனமும் அழகுற உள்ளன. சாந்த சொரூபியாக முருகன் காட்சி தருகின்றார்.

சாந்த சொரூபியாக முருகன்

காளியம்மனும் மலைப் பாதையும்

ஆதியில் தோரணமலையின் உச்சியில் காளியம்மன் கோவில் மட்டுமே இருந்ததாகவும் அக்கோவிலுக்கு செல்வதற்கான பாதை மிகவும் செங்குத்தாக இருந்ததனால் இப்போதிருக்கும் பாதை சீர் செய்யப்பட்டதாகவும் கூறுகின்றனர். இங்குச் சித்தர்கள் வாழ்ந்த காலத்தில் பெருவிரலை/ ஊன்றுகோலை மட்டும் ஊன்றுவதற்குச் சிறுகுழிகள் செதுக்கப்பட்டிருந்தன. அக்குழியில் கால் பெருவிரலை அல்லது ஒரு கோலை ஊன்றி நடந்து மலை உச்சிக்கு சென்றனர். 16ஆம் நூற்றாண்டில் மலை உச்சியில் சித்தர்கள் வாழ்ந்த குகையில் முருகன் சிலை பிரதிஷ்டை செய்யப்பட்டது.

காளியம்மன் கோயில்

வடக்கு நோக்கி வடக்குவாய்ச்செல்வியாக எழுந்தருளியிருந்த காளியம்மன் கோவிலுக்குப் போவதற்கு மக்கள் மிகவும் சிரமப்பட்டனர். பௌத்தத்துறவிகள்/சித்தர்கள் மட்டுமே மலையில் வசித்தனர். அதனால் பொதுமக்கள் அங்குச் சென்றதில்லை. இக் கோயிலுக்கு அருகில் மலைப்பாறையில் **திருப்பாதம்** காணப்படுகிறது. இத்திருப்பாதமும் இம்மலை பௌத்தத்துறவிகள் வாழ்ந்த இடம் என்பதை உறுதி செய்கின்றது. இந்த ஊருக்கு அருகே உள்ள திருமலை முதலான சில ஊர்களில் அம்மனுக்கும் முருகனுக்கும் ஒரே மலை உச்சியில் கோயில்கள் உள்ளன.

சித்தர்களின் மருத்துவப் பள்ளி

தோரணமலை ஒரு காலத்தில் சித்தர்களின் இருப்பிடமாக இருந்தது. இங்கு வாழ்ந்த தலைமைச் சித்தர்களிடம் பல சீடர்கள் மருத்துவம், ரசவாதம், ஜோதிடம் போன்றவற்றில் பயிற்சி பெற்றனர். அகத்தியர் தலைமைச் சித்தராகவும் தேரையர் அவருடைய பிரதம சிஷ்யராகவும் கருதப்படுகிறது.

கதை 1

அகத்தியர் இங்கு வந்த கதை

சித்தர்கள் கதைகள் பலவற்றில் அகத்தியரும் போகரும் தொடர்புபடுத்தப்படுகின்றனர்.

சிவபெருமானின் திருமணத்திற்கு வந்த கூட்டத்தால் உலகின் வடபகுதி தாழ்ந்தது. அதனைச் சரி செய்ய வேண்டி சிவபெருமான் அகத்தியரைத் தென்பகுதி நோக்கி அனுப்பினார். அப்போது அகத்தியர் தங்களின் திருமணத்தைக் காணாமல் நான் போகின்றேனே என்று வருந்தினார். சிவபெருமான் 'நீ எங்கிருந்தாலும் உனக்கு என்னுடைய திருமணக் காட்சியைக் காண முடியும்' என்று வரம் அருளி அனுப்பினார். அவ்வாறு அகத்தியர் வந்து தங்கிய தலம் தோரணமலை ஆகும். அவ்வாறு தென் திசை வந்த போது இங்குள்ள மூலிகைகளைக் கண்டு இங்கேயே தங்கவிட்டார். இந்தத் திருமணக் காட்சி கதை தான் வேறுபல திருத்தலங்களுக்கும் சொல்லப்படுகின்றது. அகத்தியர் இங்குத் தங்கி இருந்து ஒரு லட்சத்து 24 ஆயிரம் ஸ்லோகங்கள் கொண்ட அகத்திய வைத்திய சேகரம் என்ற நூலை எழுதினார்.

கதை 2

தேரையர் கதை

காசிவர்மன் என்ற மன்னனுக்கு தலையில் குடைச்சல் ஏற்பட்டது. அவன் பல மருந்துகள் உட்கொண்டும் குணமடையாத காரணத்தினால் இங்கு அகத்தியரின் வைத்தியசாலைக்கு வந்தான். அகத்தியர் அவன் தலையைப் பிளந்து ஆராய்ந்த



மரத்திற்கு பாலாபிஷேகம்

போது உள்ளே ஒரு தேரை ஒட்டிக் கொண்டிருந்தது. அதை எவ்வாறு எடுப்பது என்று அவர் யோசித்துக் கொண்டிருந்த வேளையில் அருகில் இருந்த ஒரு சீடர் ஒரு பாத்திரத்தில் தண்ணீரை வைத்து அதில் தன் விரல்களை விட்டு சலம்பிக் கொண்டே இருந்தார். தண்ணீர் சத்தத்தை கேட்ட தேரை சட்டென்று வெளியேறி அந்த தண்ணீர் பாத்திரத்தில் குதித்து விட்டது. தேரை தானே, அகன்றதைப் பார்த்த அகத்தியர் மனம் மகிழ்ந்து அந்தச் சீடரை அன்று முதல் தேரையர் என்று அழைத்தார். பின்பு சந்தானகரணி என்ற மூலிகைச் சாற்றால் கபாலத்தை மூடிவிட்டார். இந்நிகழ்ச்சி நடந்த இடம் தோரணமலை ஆகும்.

தோரணமலையில் பௌத்த சமயங்கள் பரவிய ஜப்பான், சீனா போன்ற நாடுகளில் இருந்தும்

ஆட்கள் வந்து தங்கியிருந்து மருத்துவம் (பாஷாணம், ரசமணி) படித்துச் சென்றனர். இங்கிருந்த அகத்தியரின் மருத்துவ பாடசாலை போல பின்பு இப்பகுதியில் இலஞ்சி, மருதமலை, ஆவினன்குடி, கொல்லிமலை, சித்தர் குகை போன்ற மலைகளிலும் மருத்துவப் பாடசாலைகள் தொடங்கப்பட்டனவாம்.

முருகன் கோவில் பிரபலமானது எப்படி?

தற்போது வழிபாட்டில் இருக்கும் முருகன் கோயில் 1970 ஆம் ஆண்டு முதல் ஆதிநாராயணன் என்பவரின் நிர்வாகப் பொறுப்பில் செயல்பட்டு வருகின்றது. அவர் இக்கோவிலை பிரபலப்படுத்துவதற்காக திருநெல்வேலி, கன்னியாகுமரி, திருச்செந்தூர் மாவட்டங்களின் திரையரங்குகளில் ஸ்லைடு போட்டார். இதனைப் பார்த்த சினிமா ரசிகர்கள் இக்கோவிலுக்குப் பெருங் கூட்டமாக வரத் தொடங்கினர். இக்கோவில் மக்களிடையே பிரபலமாயிற்று. இங்குப் பல திரைப்படங்களின் படப்பிடிப்புகள் நடந்தன. இங்கு வந்தவர்களுக்கு எல்லாம் ஆதிநாராயணன் தன்னால் இயன்ற அனைத்து உதவிகளையும் செய்தார்.

சிறுச்சுற்றுக் கோவில்கள்

கிருஷ்ணன், சரஸ்வதி, மகாலட்சுமி, சிவபெருமான் என்று பல தெய்வங்களுக்குச் சுதைச் சிற்பங்கள் உள்ளன. மலைக்கு செல்லும் படிக்கட்டு

மலை அடிவாரத்திலேயே உற்சவமூர்த்திக்கு உள்ள கோவில்

தொடங்கும் இடத்தில் உற்சவமூர்த்தியாகிய பாலமுருகனுக்குத் தனிக் கோவில் உள்ளது.

அடிவாரத்தில் உற்சவர்

கோவில் உச்சிக்குப் போய் கருவறை நாதரான முருகனை வழிபடுவதற்கு பலருக்கும் உடல் வலிமையும் நேரமும் இல்லை என்ற காரணத்தினால் மலை அடிவாரத்திலேயே உற்சவமூர்த்திக்கு ஒரு கோவில் எழுப்பப்பட்டது. அருகில் உப சந்நிதிகள் அனைத்தும் எழுப்பப்பட்டன இங்கு வல்லப விநாயகர், தட்சிணாமூர்த்தி, நவக்கிரகங்களுக்கு தனிச் சந்நிதி உள்ளது. மலையடிவாரத்தில் உள்ள இச்சந்நிதிகளில் மூன்று வேளையும் பூசை நடக்கும்.

மலைமேல் உள்ள முருகன் கோவிலுக்கு மதியம் ஒருவேளை மட்டுமே பூசை நடக்கும்.

படிக்கட்டுகள்

தோரணமலை மீது ஏறிச் செல்வதற்கு நல்ல படிக்கட்டுகள் இப்போது அமைக்கப்பட்டுள்ளன. வழியில் மொட்டைப் பாறை இருக்கும் இரண்டு இடங்களில் மலையேறும் பக்தர்கள் தங்கிச் செல்ல மண்டபங்கள் கட்டி வசதி செய்துள்ளனர். வழியில் சுயம்புவாகத் தோன்றிய சிவன் சந்நிதியும் உண்டு.

தோரணமலை பெயர்க் காரணம் ராமநதி, சம்பு நதி என்று இரண்டு நதிகள் இம்மலையைச் சுற்றி தோரணமாக ஓடி வருகின்றன. இவ்விரு நதிகளுக்கும் இடையில் இருக்கும் இம் மலையை முற்காலத்தில் வாரணமலை என்று அழைத்தனர். இம்மலை யானைப் படுத்திருப்பதை போன்ற ஒரு தோற்றத்துடன் இருப்பதால் வாரணமலை என்று அழைக்கப்பட்டதாம்.

அபிஷேக சிறப்பு

தோரணமலையின் உச்சியில் இருக்கும் முருகன் குகைக் கோவிலின் இடது பக்கத்தில் ஒரு சுனை உள்ளது. அந்த சுனை நீரினை எடுத்தே முருகனுக்கு

தினமும் அபிஷேகம் செய்கின்றனர். இம்முருகன் கோவிலுக்கு வடக்குப் புறத்திலும் ஒரு கை போகும் அளவுக்கு ஒரு சந்து உள்ளது. அதற்குள்ளும் ஒரு சுனை இருப்பதாகக் கூறுகின்றனர். இம்மலையில் மட்டும் 64 சுனைகள் இருக்கின்றன.

மலையில் உள்ள சுனைகளின் அருகில் சித்தர்கள் இருப்பதாகவும் அவர்கள் அரூபமாக இருப்பதால் அப்பகுதிக்குச் செல்லும் பக்தர்களின் கண்களுக்குத் தெரிவதில்லை என்றும் கூறுகின்றனர்.

பாத தரிசனம்

தோரணமலை மேலே இராமர் பாதம் எனப்படும் ஒரு பாதம் உள்ளது. அதற்கு அருகில்

மலையில் உள்ள சுனை

தான் பத்திரகாளி அம்மன் கோவில் தனியாக காணப்படுகின்றது.

நேர்த்திக்கடன்கள்

தோரணமலையின் அடிவாரத்தில் உள்ள சப்த கன்னியர் கோவிலுக்கு எதிரே உள்ள ஆலமரத்தில் பெண்கள் குழந்தை வரம் வேண்டியும் திருமண வரம் வேண்டியும் தொட்டிலையும் மஞ்சள் கயிறையும் கட்டுகின்றனர். தைப்பூசத்தன்று ஏராளமானோர் அலகு குத்தியும் பால்குடம் எடுத்தும் இங்கு வருகின்றனர். மொட்டை எடுத்தல், காவடி தூக்குதல் போன்ற நேர்த்திக்கடன்களும் முருகனுக்கு நிறைவேற்றப் படுகின்றன. சப்த கன்னியர் கோயில் மரத்தில் பிள்ளை வரம் வேண்டி

வரம் வேண்டி தொட்டிலும், கயிறும் கட்டும் ஆலமரம்

பெண்கள் வளையல்களையும் தொங்க விடுகின்றனர்.

விவசாயிகளின் நன்றிக்கடன்

தோரணமலையின் அருகே வாழும் விவசாயிகள் தங்களுடைய முதல் விளைச்சலைக் கோவிலுக்குக் காணிக்கையாக வழங்குகின்றனர். நெல் அறுவடை செய்தவுடன் புது நெல்லில் குத்தி எடுத்த பச்சரிசியைக் கொண்டு முருகன் கோவிலுக்குப் பொங்கல் வைத்து அங்கு வந்திருப்பவர்களுக்குப் பரிமாறி மகிழ்கின்றனர்.

நோய் தீர்க்கும் முருகன் தோரணமலை சித்தர் மலை என்பதால் இங்கு மருத்துவப் பணிகள் நிறைய நடந்த காரணத்தினால் இங்கு இருக்கும் முருகனும் நோய் தீர்க்கும் முருகனாக வணங்கப்படுகிறான். தீராத நோயையெல்லாம் தீர்க்கும் மருத்துவத் தீர்த்தமாக இங்கே உள்ள சுனை நீர் வழங்குகின்றது. அவை மருத்துவ மூலிகைகளின் சாரத்தை எடுத்து வருவதால் இச்சுனை நீரில் குளித்தவர்களுக்குத் தோல் நோய் மற்றும் மனநோய் தீர்ந்து. குணமடைகின்றனர்.

கோவில் கதை

சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன்பு வெங்கலவன் என்பவர் இப்பகுதியில் வாழ்ந்து வந்தார். தற்போதுள்ள மலைக்கோயில் அவர்

கட்டிய கோவில் என்றும் கூறுகின்றனர். ஆனால் 1928 ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட முருகன் சிலை தான் மூலவராக மலை உச்சியில் வைக்கப்பட்டுள்ளது.

கதை 3

கூன் பாண்டியன் கதை

தோரணமலை ஒரு மருத்துவத் தலம் என்பதற்கு இன்னொரு கதையும் வழங்குகின்றது. ஒருமுறை மதுரையை ஆண்ட கூன் பாண்டியன் அகத்தியரிடம் தன்னுடைய கூனை நிமிர்த்துமாறு வேண்டினான். 'சரி அதற்கான மூலிகைகள் கிடைக்கும் பருவத்தில் அவற்றைப் பறித்து மருந்து தயாரித்துத் தருகின்றேன் என்று பதில் கூறினார். மழைக்காலம் வந்ததும் அதற்கான மூலிகைகள் துளிர்த்தன. அவற்றைப் பறித்து வரும்படி செய்து தேரையரின் பொறுப்பில் மருந்தைக் காய்ச்ச ஏற்பாடு செய்தார். தேரையர் மருந்தைக் காய்ச்சிக் கொண்டு இருந்தார். அப்போது அகத்தியரைச் சந்திக்க சிலர் வந்திருந்தனர். அவர்கள் குடிசைக்குள் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கும்போது தேரையர் மருந்து காய்ச்சிக் கொண்டிருந்த இடத்தில் இருந்த வளைந்த மூங்கில் நிமிர்ந்ததைக் கண்டார். தான் காய்ச்சிய மருந்தின் ஆவி பட்டுத் தான் வளைந்த மூங்கில் நிமிர்ந்தது என்பதை உணர்ந்தார். உடனே

தேரையர் மருந்தை இறக்கி வைத்து விட்டு வேகமாக ஓடி வந்து அகத்தியரிடம் கூறினார். அகத்தியர் 'ஏன் மருந்தை இறக்கி வைத்தாய் அதற்குள் பக்குவம் ஆகிவிட்டதா?' என்று கேட்டுக் கொண்டே வந்தவர் வளைந்த மூங்கில் நிமிர்ந்ததைப் பார்த்து வியப்படைந்தார். சரியான பதத்தில்தான் இறக்கி இருக்கிறாய் என்று தேரையரை வாழ்த்தி விட்டு உடனே கூன்பாண்டியனை வரவழைத்து அம் மன்னனுக்கு இம்மருந்தைத் தடவவும் அவனது கூன் நிமிர்ந்தது. அன்று முதல் தேரையர் இவருடைய பிரதம சிஷ்யர் ஆனார்.

பக்தர்கள் படிவழியே மலையேறுதல்

கதை 4

இராமர் பாதத்துக்கான கதைகள்

தோரணமலையில் உள்ள 'பாதத்தை' ராமர் பாதம் என்று நிறுவதற்காக பல கதைகளைச் சொல்கின்றனர். இம்மலையில் மாயமான் குறிச்சி என்று ஒரு பகுதி உள்ளது. குறிச்சி என்றால் குறிஞ்சி நிலப்பகுதி. இம்மலையில் ஒரு பகுதியில் ஓடி ஆடிக்கொண்டிருந்த மான் ஒன்று ஒரு இடத்திற்கு வந்ததும் மறைந்து விட்டதாம். எனவே இப்பகுதியை 'மாயமான் குறிச்சி' என்கின்றனர்.

மற்றொரு இடம் 'குத்தரை பாஞ்சான்' எனப்படுகின்றது. இந்த இடத்தில் ஒரு மான் தலை குப்புறக் கீழே பாய்ந்தது என்றும் அதனால் இவ்விடத்தைக் 'குத்தரை பாய்ஞ்சான்' என்று அழைப்பதாகவும் கூறுகின்றனர்.

இந்திரன் பொத்தை

'பொத்தை' என்றால் போதியர் அல்லது போதிசத்துவருக்குக் கோயில் இருக்கும் மலைக் குகையாகும். போதியர் எனப்படும் பௌத்தத் துறவிகள் வணங்கிய இந்திர தேவனுக்குக் கோயில் இருக்கும் குகை 'இந்திரன் பொத்தை' எனப்படும். நாகர்கோவில் பகுதியில் 'இந்திரன் பொத்தை' என்று ஒரு மலை உண்டு. அங்கு ஒரு குகையில் இந்திரனுக்குத் தனிக் கோவில் உள்ளது. அதுபோலத்

தோரணமலையிலும் **'ஒக்க நின்றான் பொத்தை'** என்ற இடம் உள்ளது. மாயமனைத் தேடி வந்த இராமபிரான் இந்த இடத்தில் வந்ததும் ஒரு சாய்வாக நின்று அந்த மானைப் பார்த்தார். அதனால் சாய்ந்து நின்ற இடம் என்ற பொருளில் ஒக்க நின்றான் பொத்தை அழைக்கப்படுவதாகக் கூறுகின்றனர்.

ஒக்க நின்றான் பொத்தைக்குக் கீழே **மூக்கறுத்தான் ஓடை** உள்ளது. இதுவே இலட்சுமணன் சூர்ப்பனகையை மூக்கறுத்த இடம் ஆகும். எனவே அந்த இடத்திற்கு மூக்கறுத்தான் ஓடை என்று பெயர். இராமர் சீதையைத் தேடி வந்த இடம் மலைப்பகுதி என்பதால் அவர் நின்ற இடத்தில் காணப்படுவதே அவரது பாதம் என்கின்றனர். இப்பாதத்தை இராமர் பாதம் என்று சொல்வதற்காக இத்தனை துணைக் கதைகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

16ஆம் நுற்றாண்டுக்குப் பிறகு இராமாயண, மகாபாரதக் கதைகளைச் சொல்லப் பழகியதால் அந்த இடங்களின் உண்மையான வரலாறு மறைந்து விட்டது. இவற்றைத் தேடி ஆராய்ந்து அறிவது இன்றுள்ள இளைஞர்களின் இன்றியமையாக் கடமை ஆகும்.

தைப் பூசத் திருநாள்

தோரணமலை முருகன் கோவிலில் மற்ற முருகன் கோவிலில் இருப்பதைப் போல வைகாசி விசாகம்,

தைப்பூசத் திருவிழா

திருக்கார்த்திகை போன்ற நாட்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றாலும் தைப்பூசத் திருவிழா பத்து நாள் திருவிழாவாக நடை பெறுகின்றது. காப்புக் கட்டியவுடன் கணபதி ஹோமமும் அதனைத் தொடர்ந்து மகா ஸ்ரீ கந்த ஹோமமும் நடைபெறும். பின்பு வள்ளி தெய்வானை சமேதராய் முருகனுக்குத் திருக்கல்யாணம் நடைபெறும். தைப் பூசத்தன்று பக்தர்கள் பறவைக் காவடி எடுத்து வருவது, அலகு குத்தி வருவது போன்ற நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுகின்றனர். முருகன், நடராஜர், விநாயகர் போன்ற பரிவார மூர்த்திகளுக்குச் சிறப்பு அபிஷேக ஆராதனைகள் நடைபெறுகின்றன.

சமூக அக்கறை

இப்பகுதியில் இளைஞர்களுக்கு நல்ல நூலகம், உடற்பயிற்சி செய்வதற்கான பயிலகம் போன்றவை உள்ளன. இங்கு வந்து உடற்பயிற்சி செய்பவர்கள் மற்றும் நூல்கள் வாசிப்பவர்களுக்கு மதிய உணவும் வழங்கப்படுகிறது. சுமார் 2500 நூல்கள் இந்த நூலகத்தில் உள்ளன.

தைப்பூசத்தின் போது விடுதலைப் போராட்டத் தியாகிகள் மற்றும் இராணுவத்தில் உயிர் துறந்த இராணுவ வீரர்களுக்குச் சிறப்புச் செய்யப்படுகின்றது. பள்ளி மாணவர்களின் கலை நிகழ்ச்சி நடை பெறுகின்றது. மாணவர்களும் இளைஞர்களும் பங்கு பெறும் நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

முன் வரலாறு

மடாலயங்கள்

மலைகள் தோறும் வசித்து வந்த குறிஞ்சி நில மக்கள் ஆதிகாலத்தில் வீரர்களுக்கும் நடுகல் நட்டு வீர வழிபாடு செய்தனர். பின்பு தங்கள் குலத்தின் தலைவனான முருகனுக்குக் கோவில் எடுத்து வழிபட்டனர். கி.மு. மூன்றாம் நூற்றாண்டுக்குப் பிறகு இங்கு வந்த பௌத்த சமயத்தினர் மலை உச்சியில் குறிப்பாக மூலிகைகள் நிறைந்திருக்கும் மலைப்பகுதிகளைத் தேடி அதன் உச்சியில் தாங்கள் தங்கியிருக்க மடங்களை அமைத்தனர். மலை அடிவாரத்தில் மக்களுக்குச் சேவை செய்யும் ஆலயங்களை எழுப்பினர். அதன் அருகில் மூலிகைத் தோட்டங்களை வைத்துப் பராமரித்தனர். தியானம் யோகம் செய்ய ஆலயம் என்ற தனி இடத்தையும் மருத்துவ சேவை செய்வதற்காக அதனருகில் மற்றோர் இடத்தையும் வைத்து பராமரித்தனர். மலைப்பகுதியில் இருந்த மூலிகை மருந்துகளும் மூலிகை சாரம் நிறைந்த சுனைநீரும் இவர்களின் மருத்துவப் பணிகளுக்கு அதிகம் பயன்பட்டன.

பாத தரிசனம்

பௌத்தர் தாம் இருக்கும் எல்லா நாடுகளிலும் புத்தரின் பாத வழிபாட்டைச் செய்கின்றனர். புத்தர் பாதம் என்ற பெயரில் பாறையில் பாதம் செதுக்கி

வைத்து வழிபடுவது பௌத்தர்களின் தனிப்பட்ட வழிபாட்டு முறையாகும். இதுவே பின்னர் இராமர் பாதம் என்றும் ருத்ரபாதம் என்றும் ஆங்காங்கே வெவ்வேறு பெயர்களால் தொடர்கின்றது.

முடி காணிக்கை

பௌத்தத் துறவிகள் வைத்திருக்கும் மூன்று பொருட்களில் முக்கியமான ஒரு பொருள் சவரக்கத்தி ஆகும். தனக்குத்தானே அவர்கள் தலையைச் சவரம் செய்து கொள்வார்கள். எனவே இவர்களின் இருப்பிடங்கள் பின்னர் வைதீகத் தெய்வங்களின் கோவிலாக மாறிய போது அந்தந்த

பக்தர்கள் முடி காணிக்கை செலுத்துதல்

இடங்களில் மொட்டை அடிக்கும். பழக்கம் தொடர்ந்தது. இதுவே முடி காணிக்கை கொடுக்கும் பழக்கமாகத் தொடர்கின்றது.

முருகனும் காளியம்மனும்

பெரும்பாலும் மலையில் பௌத்தமடங்கள் இருந்த இடங்களில் இவர்கள் வெளியேறிய பிறகும் கூட முருகன் வழிபாடு தொடர்கின்றது. இவர்கள் வைத்து வணங்கிய போதி சத்துவர் அல்லது பெண் புத்தரான தாராதேவி கோவில்கள் முருகன் மற்றும் பத்திரகாளி அம்மன் கோயில்களாகப் பெயர் மாற்றம் பெற்றுத் தொடர்கின்றன.

மலை உச்சியில் இருந்த பௌத்தத் துறவியின் உருவச் சிலைகள் பின்பு முருகனின் உருவச் சிலைகளாகப் போற்றப்பட்டன. தாராதேவி கோவிலின் சிலைகளும் அம்மன் சிலைகளாக மாற்றம் பெற்றன. வழிபாடுகள், நேர்ச்சைகள் நம்பிக்கைகள் தொடர்கின்றன.

மருத்துவ மலை

தோரணமலையில் நடந்த மருத்துவ சேவையும் கல்வியும் ஆராய்ச்சியும் பழைய நம்பிக்கையின் தொடர்ச்சியாக மருத்துவம் சார்ந்த மலைகளாகப் புதிய கதைகளோடு பின்னிப் பிணைந்துள்ளன.

மறைந்து வாழ்ந்த சித்தர்கள்

அவலோகதிஸ்வரர் என்ற பெயரில் வாழ்ந்து வந்த பௌத்தத் துறவிகள் அகத்தீஸ்வரர் என்று சைவசமயப் பேரெழுச்சி ஏற்பட்ட பின்பு பெயர் மாறினர். பௌத்தர்களும் சமணர்களும், மதம் மாறினர் அல்லது தமிழகத்தை விட்டு வெளியேறினர். ஒரு சில துறவிகள் மட்டும் மேற்கு தொடர்ச்சி மலையில் சித்தர்கள் என்ற பெயரில் மறைந்து வாழ்ந்தனர். இவர்கள் பொதுமக்கள் கண்களில் தென்படுவ தில்லை. எனவே சித்தர்கள் அரூபமாக இருக்கின்றனர் என்றும் நாய், பறவை, பாம்பு வடிவில் கண்களுக்குத் தென்படுவர் என்றும் நம்பிக்கை வளர்ந்தது.

மேற்குத் தொடர்ச்சி மலை நெடுகிலும் கேரளப் பகுதி வரை பௌத்தத் துறவிகள் மலைகளில் வாழ்ந்து மருத்துவம், ரசவாதம், ஜோதிடம், மாந்திரீகம், களரி கராத்தே போன்ற தற்காப்புக் கலைகளை பரிபாஷைகள் மூலமாக வளர்த்தனர். பரிபாஷையின் பொருள் தெரியாத காரணத்தால் பின் வந்தவர்களால் இவற்றைத் தொடர இயலவில்லை. எனினும் கோவில், வழிபாடு போன்றவற்றில் பெயர்கள் மாறினாலும் வழிபாட்டு முறைகள் தொடர்ந்து வருகின்றன.

✡

6. செட்டிகுளம் செங்கரும்புச் செவ்வேள்

பெரம்பூர் செல்லும் வழியில் பாடாலூருக்கு அடுத்து எட்டு கிலோமீட்டர் தொலைவில் செட்டிகுளம் என்ற திருத்தலம் உள்ளது. இங்கு மலையடிவாரத்தில் ஏகாம்பரேஸ்வரர் அருளும் சிவன் கோயிலும் மலை உச்சியில் செங்கரும்புச் செவ்வேள் அருளும் பால சுப்பிரமணியசாமி கோயிலும் உள்ளது.

மலையடிவாரத்தில் ஏகாம்பரேஸ்வரர் கோவில்

மலைக்கோயில் படிகட்டு

செட்டிகுளம் மலைக் கோவிலுக்கு முருகனைத் தரிசிக்க மேலே ஏறி செல்வதற்கு 240 படிகளும் கீழே இறங்குவதற்கு 243 படிகளும் உள்ளன. முருகன் கோவிலில் வீரபத்திர சாமி சந்நிதியும் உண்டு. இங்குத் திருமணம், குழந்தை வரம், நோய் குணமாதல் ஆகியவற்றிற்கு முருகனை வேண்டிக்கொண்டு நேர்த்திக் கடன்களை நிறைவேற்றுகின்றனர். சிவன் கோவிலில் குறிப்பாகக் குபேரன் கோவிலில் தொழில் விருத்திக்குப் பிரார்த்தனை செய்கின்றனர்.

நேர்த்திக்கடன்கள்

முருகன் கோவிலில் குழந்தை வரம் வேண்டி கரும்புத் தொட்டில், கட்டுதல் காவடி தூக்கி வருதல், எடைக்கு எடை பொருள் வழங்குதல், கால்

கரும்புத் தொட்டில் காவடி

நடைகளை நேர்ந்து விடுதல், வெள்ளியால் வேல் செய்து காணிக்கையாக்குதல், பால், தயிர், தேங்காய், பழம், சந்தனம், பஞ்சாமிர்தம், எண்ணெய் கொண்டு முருகனுக்கு அபிஷேகம் செய்தல் மற்றும் சஷ்டி நாட்களில் கலசாபிஷேகம் செய்தல் போன்றவை நடைபெறுகின்றது.

கதை ஒன்று
முனிவர்களின் இரவுப் பூசை

சமயவரலாறு மாறும் போது கதைகளும் வழிபாட்டு முறைகளை மாறுவது இயற்கை. இம் மலைக்கோயிலுக்கு சிவன், முருகன் இருவரும் இடம்பெறும் வகையில் புதிய கதை உள்ளது.

ஒருமுறை பெரிய வணிகர் குழுவினர் இப்பாதையைக் கடந்து சென்ற போது இவ்விடத்தில்

இரவு தங்கினர். இந்த இடம் அப்போது கடம்ப மரங்கள் நிறைந்த கடம்பவனமாக இருந்தது. இங்கு இரவில் மணி சத்தம் கேட்கவும் அவர்கள் மணி ஓசை வந்த இடம் நோக்கி மெல்ல நகர்ந்து வந்து பார்த்தனர். அங்குச் சில துறவிகள் ஒரு லிங்கத்துக்குப் பூஜை செய்து கொண்டிருந்தனர். மறுநாள் அவர்கள் திருச்சிராப்பள்ளிக்குச் சென்றனர். அங்கு உறையூரைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த சோழ மன்னனிடம் கடம்பவனத்தில் இரவில் கேட்கும் மணியோசையும் லிங்க பூஜையும் பற்றிக் கூறினர். மன்னர் அவ்விடத்திற்கு வந்தார். அங்கு சிவலிங்கமோ பூஜை செய்த தடயமோ காணவில்லை. அங்கு வந்த பெரியவர் ஒருவர் 'வாருங்கள் நான் சிவலிங்கம்

தண்டாயுதபாணி கோவில்

சேவற்கொடியோன் சந்நிதி

இருக்கும் இடத்தைக் காட்டுகிறேன்' என்று சொல்லி ஓர் இடத்திற்கு அழைத்துச் சென்றார். அவ்வாறு அழைத்துச் சென்றவரைத் திடீரெனக் காணவில்லை. ஆனால் அந்த இடத்தில் ஒரு சிவலிங்கம் கண்ணுக்குத் தெரிந்தது. எனவே அங்குச் செங்கரும்புடன் வந்தவர் முருகப்பெருமான் என்பதைப் புரிந்துகொண்ட மக்கள் மெய் மறந்து துதித்தனர். அவருக்கும் அந்தத்துறவி வடிவிலேயே கோயில் எழுப்பினர்.

செட்டிகுளமும் கோயில்களும்

வணிகர்கள் சிவலிங்கம் கண்ட இடத்தில் முதலில் ஒரு குளத்தை வெட்டினர். வணிகர்கள் வெட்டிய குளம் என்பதால் இக்குளம் செட்டிகுளம் எனப்பட்டது. பின்பு கரும்பு கொண்டு வந்த முருகனுக்கு ஒரு கோவில் கட்டினர். சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து ஏகாம்பரேஸ்வரர் என்ற பெயரில் ஒரு கோயிலை உருவாக்கினர். எனவே இங்கு ஒரு சிவன் கோவிலும் அருகில் பாலசுப்பிரமணியன் கோவிலும் உள்ளது. வளையல் செட்டி ரூபத்தில் அகத்திய முனிவருக்கு முருகன் காட்சி அளித்தார் என்று செட்டியோடு தொடர்புபடுத்தி முருகனுக்கும் ஒரு கதை வழங்குகின்றது.

பாலதண்டாயுதபாணி

பாலதண்டாயுதபாணி துறவியைப் போல தலையில் சடாமுடியுடன் கையில் செங்கரும்புடன் காட்சி தருகின்றார். நாலடி உயரத்தில் இருக்கும் இச்சிலை 11 கணுக்கள் கொண்ட கரும்பைக் கையில் வைத்திருக்கின்றது. பழனியில் இருக்கும் தண்டாயுதபாணியைச் சிலர் போகர் என்பர். அவர் தண்டு எனப்படும் தடியை வைத்திருப்பார். இங்கிருக்கும் முருகன் தலை மொட்டை கிடையாது. கையில் தண்டு கிடையாது. எனினும் இம்மலையை வட பழனி என்கின்றனர். முருகனின் சிலை மீது

கரும்புடன் முருகன்

மாசி மாதம் மூன்று நான்கு ஐந்தாம் தேதிகளில் சூரிய ஒளி விழுவது இக்கோவிலின் தனிச் சிறப்பாகும்.

கதை இரண்டு

செங்கரும்புச் செவ்வேள்

செட்டிக்குளம் முருகனுக்கு ஒரு புராணக் கதை சொல்லப்படுகின்றது. சிலர் வடபழனி என்றும்

முருகனுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து அழைக்கின்றனர் இங்கே உள்ள தீர்த்தம் பஞ்ச நதி எனப்படும் மலைச் சுனையாகும். மூலிகை மருந்துகளின் வழியாக மலைச்சுனை நீர் ஓடி வருவதால் இவ்விடம் நோய்களைத் தீர்க்கும் மருத்துவத் தலமாகவும் விளங்குகின்றது. தேவர்கள் அசுரர்களிடமிருந்து தங்களைக் காப்பாற்றும் படி கைலாயத்தில் உள்ள சிவபெருமானிடம் சென்று வேண்டினர். அப்போது அன்னை பார்வதியும் சிவபெருமான் அருகில் இருந்த காரணத்தால் பார்வதி தேவியார் தன் மகன் முருகனை அழைத்து அவனிடம் செங்கரும்பு ஒன்றைக் கொடுத்து 'நீ போய் அசுரர்களை அழித்து வா' என்றாள். முருகப்பெருமான் தன் கையில் இருந்த கரும்பால்

மலையில் காணப்படும் சித்தர் சந்நிதி

விநாயகர் சந்நிதி

அசுரர்களை வென்று திரும்பினார். இங்கு அதே கரும்புடன் கோயில் கொண்ட அருளினார்.

இன்னொரு கதையும் உள்ளது. கண்ணகியின் கோபத்தைத் தணிக்கவும் அவள் மதுரகாளி ரூபத்தில் எழுந்தருளவும் அவளை அமைதிப்படுத்த முருகன் உதவியதாகவும் சொல்கின்றனர். இக்கதை இரண்டு தலங்களுக்கும் தொடர்பு இருப்பதனை உறுதி செய்கின்றது.

கதை மூன்று

காமாட்சி கொடுத்த கரும்பு

கடம்பவனத்தில் முற்காலத்தில் முனிவர்கள் தவம் செய்து கொண்டிருந்தனர். அவர்களுக்கு

வழக்கம் போல அசுரர்கள் மிகுந்த தொல்லை கொடுத்தனர். அந்த அசுரர்களைத் தன் கையில் இருந்த வேலால் அழித்து ஒழித்த முருகப் பெருமானுக்குக் காமாட்சியம்மன் செங்கரும்பை கொடுத்து வாழ்த்தி மகிழ்ந்தார். எனவே தாயார் கொடுத்த செங்கரும்பை தன் கையில் ஏந்தி பக்தர்களுக்கு அருள் வழங்கும் விதமாக முருகன் இங்குக்காட்சி அளிக்கின்றார். (காஞ்சி காமாட்சி காஞ்சிபுரத்தில் கையில் கரும்புடன் காம யட்சியாக காட்சி தருவாள். அவளது வழிபடு சின்னம் ஆவுடை மட்டுமே)

தலைமுடி காணிக்கை

முருகன் கோயிலில் மொட்டை அடிப்பது பௌத்தக் கோயில் மரபுகளின் தொடர்ச்சி ஆகும்.

தலைமுடி காணிக்கை அளித்தல்

பழனி, திருப்பதி, அழகர் கோயில் போன்ற பழைய பௌத்தக் கோயில்கள் இருந்த இடங்களில் மட்டும் பக்தர்கள் மொட்டை அடித்து தலைமுடி காணிக்கை அளிக்கின்றனர். பழனிக் கோயிலில் போகர் வழிபடு தகுதி பெற்றிருப்பது போல் இங்கும் ஓர் சித்தர் வழிபடு தகுதி பெற்றுள்ளார். ஜாதகத்தில் சித்தர் வழிபாடு செய்வது நலம் தரும் என்ற நிலையில் இருப்பவர்கள் இக்கோயிலுக்கு ஆண்டுக்கொரு முறை வருவது நற்பலனை அளிக்கும்.

முன் வரலாறு

இருகோவில்களும் பழைய பௌத்த மடாலயம் என்பதற்கான சில சான்றுகள் இக்கோயில்

மலைக்கோவிலுக்கு செல்லும் பாதை

கதைகளிலும் கடவுளர் மற்றும் வழிபாட்டு முறைகளிலும் உள்ளன.

பௌத்தர்கள் தம் மடம் அமைக்கும் இடம் நல்ல அடர்ந்த வனமாக இருக்கவேண்டும் என்று விரும்பினர். ஒரே வகை மரங்களை வளர்த்து வனம் எனறு பெயரிட்டனர். தில்லை வனம், கடம்ப வனம், அரச வனம், பூ வனம் என்ற பெயர்கள் இன்றைக்குக் கோயில்கள் இருக்குமிடத்துக்கு அருகில் இருப்பதை அறியலாம். மலை உச்சியில் மதங்களையும் அடிவாரத்தில் ஆலயம் என்னும் பொதுமக்கள் சேவைக் கூடங்களையும் பௌத்தத் துறவிகள் அமைத்தனர்.

உறையூர் (உரகபுரம்)

பௌத்தக் கல்வி நகரமான உரகபுரம் இன்று உறையூர் எனப்படுகிறது. குபேரனுக்கும் முருகனுக்கும் அருளிய காமாட்சி பௌத்தர்கள் பல்கலைக்கழகம் விளங்கிய காஞ்சிபுரத்தில் உள்ள முக்கியப் பெண் தெய்வம் ஆவாள். 12 குபேரர்கள் மகா குபேர சந்நிதி, செங்கரும்புச் செவ்வேள் ஆகியன வேறு கோயில்களில் இல்லாத சிறப்புகள்.

நிறைவு

பௌத்தத் துறவிகள் இந்திரலிங்கத்தையும் கருப்பு ஜாம்பாலாவையும் அவரது இணை வசுதாராவையும் வணங்கி வழிபட்ட ஸ்தலம்

ஸ்ரீசங்கநிதி - குபேரன்-சித்திரலேகா - ஸ்ரீபத்மநிதி

இன்று சிவன் கோயிலாகி உள்ளது. ஜாம்பாலாவுக்கு (குபேரருக்கு) இங்கு 12 சிலைகள் வைத்து வணங்கி வந்துள்ளனர். செங்கரும்பைக் கையில் கொண்டுள்ள வடிவத்தில் பௌத்தத் துறவிக்கு மடத்தின் அருகில் வைத்த நினைவுச் சின்னம் இன்று முருகன் கோயிலாகி பக்தர்களின் குறைகளைத் தீர்த்து வருகிறது. பழைய கோயில்கள் இருந்த இடத்தில் புதிய கோயில்கள் கட்டுவது சமய வரலாற்றில் தவிர்க்க இயலாதவை.

✡

முனைவர் செ. இராஜேஸ்வரி

7. உத்தரவுப் பெட்டி உள்ள சிவன்மலை வள்ளி மணாளன்

அருணகிரிநாதரின் பாடல் பெற்ற சிவன்மலை முருகன் கோவில் திருப்பூர் மாவட்டத்தில் காங்கேயத்திற்கு அருகில் உள்ளது.

இங்கு சிவவாக்கியர் தவமிருந்து முருகன் சிலையைச் செய்து வைத்து வழிபட்டார். பின்பு சுரங்கப்பாதை வழியாக பழனிக்குச் சென்று அங்கு



சிவன்மலை

மூலவர் வள்ளி முருகன் திருமணக் கோலத்தில்

உள்ள முருகனை வழிபட்டார். சிவன்மலையின் மூலவர் வள்ளி மணாளனாகிய ஸ்ரீ முருகன் ஆவார். 14ஆம் நூற்றாண்டிற்கு பிறகு கந்தபுராணம் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட பின்பே தெய்வானை திருமணம் இங்கே பிரபலம் ஆயிற்று. அதன் பின்பு கட்டப்பட்ட கோயில்களிலும் முருகனுக்கு எழுப்பிய சந்நிதிகளிலும் வள்ளி தெய்வானை சமேதராகிய கந்தன் என்ற சுப்பிரமணியர் இடம்பெற்றார்.

தமிழ்க் காதல் தலம்

தமிழ்ச் சமய வரலாற்றில் முருகனுக்கு ஒரே ஒரு மனைவி வள்ளி மட்டுமே உண்டு. முருகன் மலைக்

கடவுள். வள்ளியும் மலையில் பிறந்தவள். இருவரும் ஒருவரை ஒருவர் கண்டு காதலித்துத் திருமணம் செய்து கொண்டனர். தொல்காப்பியம் கிமு ஐந்தாம் நூற்றாண்டில் எழுதப்பட்ட பழந்தமிழ் இலக்கண நூலாகும்.

இந்நூலில் காதல், தரு புணர்ச்சி, பூத் தரு புணர்ச்சி, புனல் தரு புணர்ச்சி என்று மூன்று வழிகளில் காதல் தோன்றும் என வகைப்படுத்துகின்றது.

காதல் தோன்றும் சூழ்நிலைகள்

மலைக் காட்டில் கன்னிப் பெண்கள் யானையைக் கண்டு மிரண்டு பயந்து ஓடும் போது

சிவ வாக்கிய சித்தர் சிவன்மலை ஆண்டவரை பூஜித்தல்

யாரேனும் ஓர் இளைஞன் வந்து காப்பாற்றினால் அவனது வீரத்தைக் கண்டு வியந்து காதலிப்பது முதல் வகை. இதுவே வள்ளி திருமணத்திலும் நடந்தது. அடுத்தது அரிய பூவைக் கண்டு ஒருத்தி ஆசைப்பட்டு அதைப் பறிக்க முயற்சி செய்யும்போது அவ்வழியே வந்த ஒரு இளைஞன் அவளுக்காக அந்தப் பூவை பறித்துத் தந்தால் அவன் மீது அவளுக்குக் காதல் தோன்றலாம். இது பூத்தரு புணர்ச்சி ஆகும். மூன்றாவது, ஓர் இளம்பெண் ஆற்று வெள்ளத்தில் சிக்கிக்கொண்ட போது துணிச்சலான உள்ள ஓர் இளைஞன் தன் உயிரை ஒரு பொருட்டாக மதிக்காமல் ஆற்றில் குதித்து அப்பெண்ணைக் காப்பாற்றினால் அவன் வீரத்தைக் கண்டு அவள் காதல் கொள்வாள். இது புனல் தரு புணர்ச்சியாகும். (மதுரை வீரன் பொம்மி காதல் கதை இவ்வகையைச் சார்ந்தது.)

வள்ளி திருமணம்

வள்ளி திருமணம் பண்டையத் தமிழ் இலக்கண முறைப்படி நடந்த காதல் நிகழ்வாகும். யானையைக் கண்டு அஞ்சிய வள்ளியை முருகன் காப்பாற்றியதால் காதல் தோன்றியது. இம்மலையில் வள்ளியும் முருகனும் கோவில் கொண்டுள்ளனர். எனவே தமிழ்ச் சமய வரலாற்றில் இக் கோவில் மிகவும் பழைய கோவில் ஆகும். இக்கோவிலில் முதல் பூசை முருகனுக்கே செய்யப்படுகின்றது. இங்கு முருகனே

கோவிலில் காணப்படும் ஆண்டவர் திருமணக் காட்சி ஓவியம்

முழுமுதல் வழிபடு கடவுள். மற்ற கோவில்களில் விநாயகருக்கு முதல் பூசை நடைபெறும். இக்கோவிலில் சனீஸ்வரனுக்கும் காலபைரவருக்கு தனிச் சந்நிதிகள் உண்டு. நவக்கிரக சந்நிதியில் நவக்கிரகங்கள் அனைத்தும் சூரியனைப் பார்த்தபடி உள்ளன.

புதிய தெய்வ சந்நிதிகள்

சிவன்மலை முருகன் கோவிலில் சைவ சமயப் புரட்சி ஏற்பட்ட காலத்தில் புதிய சிவாலயம் நிர்மானிக்கப்பட்டது. சிவன் கோயிலுக்குரிய அனைத்து அம்ஸங்களும் இக்கோவிலில்

சிவனும் அம்மனும்

இடம்பெற்றன. தெற்குப் பிரகாரத்தில் சிவனும் அம்மனும் கிழக்கு நோக்கி காட்சி தருகின்றனர். கன்னி மூலையில் விநாயகருக்கும் குபேர மூலையில் தண்டபாணிக்கும் சந்நிதிகள் உண்டு. வாயிலில் சுமுகர், சதேகர் என்ற துவார பாலகர்கள் சிலைகள் உள்ளன. தல விருட்சமாக தொரட்டி மரம் உள்ளது.

கதை 1

இங்கு கௌதம மகரிஷி முசுகுந்த சக்கரவர்த்தியின் நோய் தீர்த்த கதை தலபுராணக் கதையாக சொல்லப்படுகிறது.

முசுவின் சிவ பூசை

முசுகுந்தன் முற்பிறவியில் குரங்காக இருந்தான். அந்த குரங்குக் ஒரு நாள் இரவு ஒரு

மரத்தின் மீது அமர்ந்தபடி இலைகளைப் பறித்து கீழே போட்டுக் கொண்டிருந்தது. கீழே தவம் செய்து கொண்டிருந்த சிவபெருமான் மீது மரத்தின் இலைகள் விழுந்து மூடிவிட்டன. கண்விழித்துப் பார்த்த சிவபெருமான் தன்னை வில்வ இலைகளால் சிவராத்திரி அன்று விடிய விடிய அர்ச்சித்து மூடியவர் யார் என்று அண்ணாந்து பார்த்தார். அங்கு ஒரு குரங்கு இருந்தது. அவனது குரங்குப் பிறவியை மாற்றி மனிதனாக்கினார்.

தல விருட்சம் தொரட்டி மரம்

நவக்கிரக சந்நிதி

ஆனால் மனிதப் பிறவி சூதுவாது நிறைந்தது என்பதால் தான் குரங்கு முகத்துடனேயே இருக்க விரும்புகிறேன் என்று முசுகுந்தன் வேண்டினான். குரங்கு முகமும் மனித உடலும் கொண்டு சூரிய குலத்தில் உதித்த சோழச் சக்கரவர்த்தியாக புதுப்பிறவி எடுத்தான். அவன் திருவாரூரை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்து வந்தான்.

கௌதமரும் முசுகுந்தனும்

முசுகுந்தச் சோழன் சுர நோயால் அவதிப்பட்டான். இந்நோயைத் தீர்க்கும்படி கௌதம ரிஷியிடம் வேண்டினான். அவர்

'சிவன்மலைக்குப் போ. அங்கு உன் நோய் தீரும்' என்றார். இக்கதை தல புராணத்தில் கூறப்பட்டுள்ளது.

இக்கதை இம்மலையில் பௌத்தர்களின் மருத்துவ சேவை நடந்ததை உணர்த்துகின்றது. கௌதம ரிஷி என்பது கௌதம புத்தர் நிலையை அடைந்த அவலோகதீஸ்வரரைக் குறிக்கின்றது. முசுகுந்தச் சோழன் இம்மலைக்கு வந்து நோய் தீர்ந்து நலம் அடைந்தான்.

சோழ வேந்தன் முசுகுந்தன்

முசுகுந்தன் என்றால் குரங்கு முகம் கொண்டவன் என்பது பொருள். சிலப்பதிகாரத்தில் 'அமரனில் பெற்று தமர்தந்து' என்ற வரி இவன் அமரலோகத்துத்

நாகர்

தலைவனாகிய இந்திரனிடமிருந்து நாளங்காடிப் பூதத்தை பெற்று தன் உறவினர்களான பூம்புகார்ச் சோழனுக்குக் கொடுத்தான் என்பதை உணர்த்துகின்றது. சோழர்கள் முசுகுந்தன் வழி வந்தவர்கள் தொடர்புடையவர்கள் நாளங்காடி பூதம் என்பது பகலில் செயல்படும் சந்தையில் இருக்கும் பூதத்தின் சிலை ஆகும்.

சப்தவிடங்கத் தலங்கள்

முசுகுந்தன் தேவலோகத்தில் இந்திரன் பூசித்து வந்த 7 லிங்கங்களைப் பெற்று அவற்றை திருவாரூர், திருநாகைக்காரோணம், திருக்காராயில், திருக்கோளிலி, திருமறைக்காடு, திருநள்ளாறு, திருவாய்மூர் ஆகிய ஏழு இடங்களில் கோயில் கொள்ளச் செய்தான். அந்த ஏழு இடங்களும் சப்த விடங்க தலங்கள் என்று பெயர் பெற்றன என்று திருவாரூர் நான்மணிமாலை குறிப்பிடுகின்றது. எனவே புதிதாக சிவாலயம் தோற்றுவிக்கப்பட்ட ஊர்களில் முசுகுந்தன் கதையும் சேர்ந்துகொண்டது.

மிளகு ரசம் மருந்து

பௌத்தர்களின் மருத்துவ சேவைக்கு பின்பு இம்மலையில் சிவாலயம் எழுப்பிய காலத்தில் முசுகுந்தனின் சுரம் தீர்த்த மூலவருக்கு சுரநாதர் என்றும் அம்மனுக்கு சுரலோக நாயகி என்றும் பெயர் சூட்டப்பட்டது. இவர்களைக் கைலாசநாதர்

சுரநாதேஸ்வரர், சுரலோக நாயகி, நவவீரர்கள்

என்றும் ஞானாம்பிகை என்றும் அழைக்கின்றனர். இன்றைக்கும் காய்ச்சலால் வாடுகின்றவர்கள் மிளகு ரசம் வைத்து இங்கு வந்து பூசாரியிடம் கொடுத்து வாங்கி அருந்தினால் அவர்களுக்கு சுரம் நீங்கும். பொதுவாக சுரநாதருக்கு சந்தனக் காப்பு நேர்ச்சை செய்து கொண்டால் சுரம் நீங்கிவிடும்

எட்டு அம்மை

சிவன்மலை அருகே உள்ள பகுதிகளில் ஒவ்வொரு ஊரிலும் பெண் தெய்வ வழிபாடு சிறப்பாக இருந்தது. எட்டு ஊர்களின் அம்மனை எட்டு அம்மை என்றும் வடமொழியில் அஷ்ட மாத்ரிகா என்றும் சிவன்மலை குறவஞ்சி

சப்த கன்னியர்கள்

தெரிவிக்கின்றது. எட்டு துர்க்கை என்று அழைக்கப்படுகின்றனர்.

அஷ்ட மாத்ரிகா என்ற எட்டுப் பெண்களுடன் பார்வதியையும் சேர்த்து நவகன்னியருக்கும் சிவன் தரிசனம் தந்தார். அஷ்டமாத்திரிகா பற்றிய தகவல் தேவி பாகவதம், லிங்க புராணம் ஆகியவற்றில் காணப்படுகின்றது. சப்தகன்னியருடன் மகாலட்சுமி / ருத்ராணி / நரசிம்மி / மகாலட்சுமி / ஆஞ்நேயிகா ஆகியோரில் ஏதேனும் ஒருவரைச் சேர்த்து அஷ்ட மாத்ரிகா என்று அழைக்கின்றனர்.

படிகளும் பாதையும்

சிவன்மலை மேல் இருக்கும் முருகன் கோவிலுக்குச்செல்ல படிகளும் உண்டு. வாகனங்கள்

செல்கின்ற பாதையும் உண்டு. படிகளில் ஏறிச் செல்பவர்கள் இளைப்பாறிச் செல்ல வழியெங்கும் கல் மண்டபங்கள் உண்டு. அமனலிங்கேஸ்வரர் கோவிலின் முன் வாயிலில் இருப்பது போல சிவன்மலை முருகன் கோவில் வாயிலிலும் தீபத் தூண் உண்டு. இத் தூணின் தண்டுப் பகுதியில் கிழக்கு நோக்கி விநாயகரும் தெற்கில் சூலாயுதமும் வடக்கில் மயிலும் மேற்கே தண்டபாணி சிலையும் வடிக்கப்பட்டுள்ளது.



தூணின் தண்டுப் பகுதியில் கிழக்கு நோக்கி நிற்கும் விநாயகர்

கதை 2
சிவன்மலையின் தோற்றம்

சிவன் திரிபுரத்தை அழிக்க மேரு மலையை வில்லாக வளைத்த போது மேருமலையிலிருந்து சிதறிய துண்டு தான் சிவன்மலை என்று நம்பப்படுகின்றது. இதே கதை இப்பகுதியில் உள்ள பவளமலைக்கும் சொல்லப்படுகிறது.

உத்தரவுப் பெட்டி

மற்ற கோவில்களில் இல்லாத ஒரு சிறப்பம்சம் சிவன்மலையில் காணப்படும் உத்தரவுப் பெட்டியாகும். இங்கு யாரேனும் ஒருவருக்கு கனவில் வந்து ஒரு பொருளை உத்தரவு பெட்டி எனப்படும் கண்ணாடிப்பெட்டிக்குள் வைக்கும்படி இறைவன் கூறுவார். மறுநாள் அவர் கோவிலுக்கு வந்து தகவலைத் தெரிவித்ததும் கோவிலில் அவர் சொல்வது உண்மையா என்று பூ கட்டி போட்டு பார்ப்பர். உண்மை என்று தெரிந்ததும் அவர் சொன்ன பொருளை கண்ணாடிப்

காசித் தீர்த்தம்

பெட்டியில் வைப்பதுண்டு. அந்தப் பொருளின் மகத்துவம் அந்த ஆண்டு அதிகரிக்கும். சேலை வைத்தால் சேலை விலை கூடும். அடுத்த தகவல் வரும் வரை அதே பொருள் கண்ணாடிப் பெட்டியில் வைக்கப்பட்டு இருக்கும்.

காசித் தீர்த்தத்தின் வரலாறு

சிவன்மலையில் உள்ள தீர்த்தத்தின் பெயர் காசி தீர்த்தம். முருகனின் பக்தையான ஒரு பெண் காசிக்குப் போய்க் கருமத்தைத் தொலைக்க வேண்டும். ஆனால் அங்குப் போக வசதி இல்லையே என்று வருந்தி வாடி முருகனிடம் வேண்டிய போது, முருகன் அருளால் இங்கு ஒர் ஊற்றுக் கிளம்பியது. அந்த ஊற்று நீர் காசி நீர் என்பதால் இத்தீர்த்தம் காசித்

தீர்த்தம் ஆயிற்று. அவள் தீர்த்தத்தில் நீராடி காசிக்குப் போன புண்ணியத்தைப் பெற்றாள்.

வழிபாட்டின் பலன்

சிவன்மலையில் உள்ள முருகன் கோவிலுக்குத் திருமணத் தடை உள்ளவர்கள், குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள், தொழிலில் திடீர் இழப்பை சந்தித்தவர்கள், தீராத நோயினால் தாக்கப்பட்டவர்கள் வந்து வணங்குகின்றனர் வழிபாட்டுக்குப் பின்பு அவர்களின் துன்பங்கள் தீர்க்கப்பெற்று நல்ல நிலையை அடைகின்றனர். திருமணத் தடை உள்ளவர்களுக்கு விரைவில் நல்ல முறையில் திருமணம் நடைபெறுகின்றது. குழந்தை இல்லாதவர்களுக்கு குழந்தைப் பேறு கிடைக்கின்றது. தொழிலில் நஷ்டத்தை சந்தித்தவர்களுக்குத் தொழிலில் நல்ல இலாபம் கிடைக்கின்றது. தீராத நோயையும் தீர்க்கும் மலையாக சிவன்மலை விளங்குகின்றது.

ஆதியில் இக்கோவில் முருகன் கோயில் ஆகும். அது சங்க காலத்துக்கும் (சுமார் 2,300 ஆண்டுகளுக்கு) முற்பட்டது. சிவன் கோயில் ஆயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம். இடைப்பட்ட காலத்தில் இங்குப் பௌத்த துறவிகளின் மடாலயம் இருந்து மருத்துவ சேவைகள் செய்துள்ளனர்.

✡

முனைவர் திருமதி **செ. இராஜேஸ்வரி**

தமிழக மாநில அரசின் சிறந்த மொழிபெயர்ப்பாளர் விருதாளர் (2022), சிறந்த பதிப்பக விருதாளர் (2023). தமிழணங்கு, சக்தி பெண்ணிதழ் ஆய்விதழ்களின் ஆசிரியர்

இவர் எழுதியும் மொழிபெயர்த்தும் வெளியிட்ட நூல்களின் எண்ணிக்கை 108. அவற்றுள் சமய வழிகாட்டி நூல்கள் 4. அவை வருமாறு:







978-81-983729-5-6

₹.200

Cover design : C. Meenatchi